அமரராக்கப்பட்ட

## திரு. பொ.தி.சிறிதரன் (Bsc Hon)

அவர்களின்

# கண்ணீர் நினைவமுதம்



05. 07. 1996

குருவாய் வருவாய்!
அருள்வாய் குகனே!!



யாழ்ப்பாணம்
நல்லூர் சட்டநாதர் வீதியைச் சேர்ந்த
**திரு. தியாகராஜா,**
**இரட்ணபூபதி தம்பதியினரின்**
அருமை மகனும்

யாழ்ப்பாணம்
நல்லூர் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த
**திரு. இராசரத்தினம் சோதிமலர் தம்பதியினரின்**
அருமை மருமகனும்

**சிறி வதனியின்**

அருமைச் சகோதரனும்

**விஜிதா இராஜசெழியன்,**

**ரஜனி, இராஜசேரன்**

ஆகியோரின் அருமை மைத்துனரும்

**திரு இராசையா,**

காலஞ்சென்ற **திருமதி தங்கம்மா இராசையா**

ஆகியோரின் பேரனும்

**ரஜிதாவின்**
அன்புக் கணவரும்
நல்லூரைப் பிறப்பிடமாகவும் வவுனியா வைரவப் புளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் தியாகராசா சிறிதரன் B. Sc (Hon)

சமூகசேவை உத்தியோகத்தர் பிரதேச செயலகம் வவுனியா அகதிகட்கான
ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தில் (U.N.H.C.R.)
வவுனியா சிதம்பரபுர நிலையப் பொறுப்பதிகாரி
அவர்களின்
அமரத்துவம் குறித்த

# கண்ணீர் நினைவமுதம்

05-07-1996

உ
சிவமயம்




| படைப்பு | பறிப்பு |
|---|---|
| 03 | 05 |
| 02 | 01 |
| 1960 | 1996 |


யாழ் - நல்லூரைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும்
கொண்டவரும்
அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய (U.N.H.C.R) அகதி
முகாம்களின் பொறுப்பதிகாரியும்
வவுனியா - செயலக சமூகசேவை உத்தியோகத்தருமான

# அமரர் திரு. தியாகராஜா சிறிதரன் B. Sc. (Hon)

குமரனாக விருந்து குன்றாப் பணிநல்கி
விபரமேது மில்லாது சாலை யோரம்
அமர ராக்கப் பட்ட உயர்திரு
சிறிதரச் செம்மலின் நினைவு முகம்.



திரு. தியாகராஜா சிறிதரன் B. Sc. (Hon)



# சேவைக்காய்த் தன்னை அர்ப்பணித்தவனின் தியாக வரலாறு

செந்தமி ழாட்சி சிறப்புடன் நடந்ததைச்
செப்பிடும் ஈழ நாட்டின் வடபால்
தன்னிக ரில்லாத் தனியரச சோச்சிய
தலையென விளங்கும் தனிநகர் யாழில்

சங்கிலி மன்னன் சார்ந்தர சோச்சிய
சிறப்புடன் கந்தன் அருளாட்சி நல்கும்
நல்லவர் வாழும் நலமிகு ஊராம்
நல்லூர் எனும் வல்லூர் தன்னில்

இன்முகப் பெரியோன் இராசை யாவும்
தனிப்பெருங் குணமுடை தங்கம் மாவும்
வன்னி எனும் மருதந் தன்னில்
வயலுடன் வணிகமும் வளமுடன் பேணி

இயற்றிய இல்லறப் பேறாய் உதித்த
இரத்தின பூபதி எனும் நல்லாளையும்
பொன்னுத் துரையும் செல்லம் மாவும்
பண்புடன் தந்த தியாக ராஜாவையும்

மனமுடன் வளர்த்து வந்திடும் நாளில்
மாண்புடன் தியாக ராஜா தன்னையே
மறுஒரு மகனாய் வல்லவ னாக்கி
மகளுக்கேற்ற மருமக னாக்கினர்.

இல்லறச் செடியும் செழித்தே வளர்ந்து
ஆஸ்திக்கு ஒன்றும் ஆசைக்கு ஒன்றுமாய்
இப்புவி தனிலே இலங்கிட வென்றே
இனிதாய்த் தந்திட்ட இரண்டு கனிகள்

தரணியில் சேவை வழங்கு வானென்றோ
மூத்தவன் சிறிதரன் நாமம் பெற்றான்
இன்புடன் வாழ்வு சிறக்க வென்றுதித்த
இளையவள் சிறி வதனி யோடு
கூடித் திரிந்து குறும்புகள் பண்ணி
குலாவி மகிழ்ந்து வாழ்ந்தனர் நன்றாய்.

அன்னையின் அமுத மழையினில் நனைந்து
அன்புடன் செல்ல மொழிபல பகர்ந்து
எட்டி அடியினை ஊன்றிய சிறீயவன்
எண்ணுடன் எழுத்தையும் படித்திட விளைந்தனன்
நல்லை செங்குந்த இந்துக் கல்லூரி
வவுனியா சைவப் பிரகாசா விலும்
ஆரம்பக் கல்வியை அறிவுடன் பெற்று
இடைநிலைக் கல்வி இனிதே தொடரவே

கல்வி மான்களையே கணக்கிலா ஈன்று
வரலாறு கொண்டயாழ் இந்துக் கல்லூரியில்
இயல்பாய்க் கல்வியை விருப்புடன் பெற்றிட
இதமுடன் சிறிதரன் இனிதே இணைந்தனன்

ஆளும் வளரணும் அறிவும் வளரணும்
என்றே கவியின் கூற்றிற் கிணங்க
அன்புடன் அறிவும் கசடற நன்றாய்
ஆளைப் போலவே வளர்ந்த தவனிடத்தே

கற்றிட்ட பொழுதில் பெற்றிட்ட வெற்றிகள்
கல்வி உட்பட விளையாட் டிலும்தான்
வவுனியா மகா வித்தியா லயத்தில்
வளமுடன் உயர்தரக் கல்வியைப் பெற்று

உதைபந் தாட்ட விளையாட்டுக் குழுவில்
முதலாம் பிரிவில் பந்துகாப் பாளனாய்
மதிப்புடன் வெற்றிகள் மலையாய்க் குவிக்க
மாண்புடன் சிறிதரன் மகிழ்வுடன் உதவினன்.

பள்ளிப் படிப்பதைப் பண்புடன் முடித்தபின்
பட்டப் படிப்பதைப் பெற்றிடக் கருதியே
பாரதப் பெரு நாடு சென்று
தாவர வியலில் விஞ்ஞான மாணியை
சென்னை குருநானக் கல்லூரி யதனில்
செவ்வையாய்க் கற்று ஏகினான் நாடு.
உயர்வுடன் கற்ற கல்வியின் பேறாய்
மாகாண சபையின் ஆளுனர் பிரிவில்
அலுவலக உதவியாள ராகப் பெற்றும்
வவுனியா விவசாயக் கல்லூரி தன்னில்
நிர்வா கத்துயர் அதிகாரி யாகவும்
நன்றாய் யவன்பணி செய்திட்ட வேளை

ஆவணங்க ளுடன்பணி யாற்றவிருப் பின்றியே
சமூகப் பணியதில் சாந்திபெற நினைந்து
சமூகத்துச் சேவை அதிகாரி யாக
வவுனியாக் கச்சேரியில் பதவியும் பெற்றனன்.

பிரியமுடன் பணி தொடர் வதற்காய்
பரிவுடன் ஓர்துணை ஏற்க எண்ணி
இராசரத்னம் சோதிமலர் தம்பதியின் புத்திரி
இரஜிதா எனும் அன்புச் செல்வியை
இன்புடன் இல்லற வாழ்வில் இணைத்தனன்
இயல்பாய் இருவரும் அவன்பணி தொடர்ந்தனர்
சிறிதரன் பதவியால் சிறப்புற வில்லை
சிறீயவ னாலன்றோ பதவியும் சிறந்தது

சொந்த மண்ணில் அவலங்கள் நேர்ந்ததால்
எம்தமிழ் மக்கள் நிர்க்கதி யாகினர்
ஏதிலி களாகவே ஆதரவு நாடி
ஏகினர் பாரதத் தமிழ்த் திருநாடு.

தேசத்தை விட்டுச் சென்ற மக்களுக்கு
நேசக் கரமங்கு நீட்ட மறுக்கவே
மறுபடி தாயகம் மீண்ட மக்களின்
இருப்பிட நலன்கள் பேணு வதற்காய்
ஐ. நா. அமைப்பின் புனர்வாழ்வுப் பிரிவாம்
U.N.H.C.R. இன் அனுசரணை யோடு
நான்கு ஆயிரம் குடும்பங் களுக்காகவே
சிதம்பர நலன்புரி நிலையம் அமைந்தது.

இன்னல்கள் அவலங்கள் தொடர்ந்துமே பட்ட
இனியதமிழ் மக்களின் ஆறாத் துயரதை
சமூகத்தின் சேவகனாய் நேரகால மின்றி
சிரித்த முகத்துடன் சிறிதரா நீ செய்திட்டாய்

அன்புக்கரம் நீட்டி ஆதரித்து அரவணைத்த
அன்பான சேவைதனை யார்தான் மறுப்பாரோ !
குறையேது மில்லாமல் பொறுமையுடன் சேவைகளைக்
குடும்பத்துள் ஒருவனாகச் சிறீதரன் முடித்திடுவான்

ஈர்மூன்று ஆண்டுகளாய் இரவும் பகலுமென
இன்முகத் தோடவன் இயற்றிட்ட சேவைகளை
நாம் சொல்லத் தேவை யில்லை
நண்பர் சொல்வர். சிதம்பர நிலைய
நன்மக்கள் சொல்வர் கூட உன்னுடன்

சேவை செய்த அலுவலர் மட்டுமல்ல
ஐ. நா. அதிகாரி உள்ளிட்ட பல்வேறு
அரச அதிபர்கள் இன்னும் தொண்டர்
அமைப்புகள் யாவரும் இங்கு மறுக்காமல்
ஏற்றிட்ட போற்றிட்ட உண்மையிது வன்றோ.......

சுக நலங்கள் பாராது
குண முடனே நீ செய்த
கருத்தான சேவை களால்
கோடி மக்கள் உள்ளங்களில்
கோபுரமாய் உயர்ந்து நின்றாய்.

கோபுரத்தின் உயர்வு தனைக்
காண மனம் பொறுக்காத
கோழை மனக் கொலை வெறியர்
காரணந் தான் கூறாது
கொடுர மதாய்க் குழி பறித்து
காலன் பணி ஏற்றனரே

ஈராண்டும் நிறையாத இல் வாழ்வை
பாசமுடன் ஒன்றிணைந்த நல் உள்ளமதை
இரக்க மின்றிப் பறித் தெடுத்து
பல்லாயிரம் நெஞ்சங்களைப்பரிதவிக்க வைத்தனரே.

உன் பிரிவு
இங்கே
பலருக்கும்
பிரதியீடு இல்லாத
இழப்பாகப் படுகிறதே !
என் செய்ய ?
உன் சேவை இல்லாத
உன் வீடு
உன் நாடு
உன் சிதம்பர நலன்புரி நிலையமக்கள்
கச்சேரி அலுவலகம்
கரமிழந்து நிற்கின்றனவே.........

உனக்காக மக்கள் வெள்ளம்
அன்றழுத கண்ணீ ரால்
கொலை செய்தோர் இனியாவது திருந்திடவே
வெண்புறாவாய் வாழ்வில் நீ
பறந்திடுவாய் சிறீதரா......................

மனிதனை நல்லவனாகவோ, கெட்டவனாகவோ மாற்றுதவற்குச் சமூகத்தின் அகப்புறச் சூழல் மிக முக்கியமான பங்களிப்பை வழங்குகின்றது என்பது சமூகவியலாளர்களின் முடிவுகளில் ஒன்றாகும். சமூகத்தின் தாக்கத்தினால் எமது சமுதாயத்தில் மனிதம் எனும் பண்புள்ளவர்களைக் காண்பது அரிது. ஆனால் அகாலமரணமடைந்த திரு. பொ. தி. சிறீதரன் என்பவரிடம் இதய சுத்தியுடன் கூடிய மனித நேயம் காணப்பட்டது என்பதை நாம் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

எமது சமூகத்தின் தேவைப்பாடுகளை உணர்ந்து சமூகத்திற்குச் சிறந்த சேவையாற்றிய துடிப்பான இளைஞனாக சிறீதரன் காணப்பட்டார். சமூகத்தின் எத்துறைக்கும் சளைக்காது பங்களிப்புச் செய்யும் ஒருவராகக் காணப்பட்டார். தான் எடுத்துக் கொண்ட காரியத்தை மிகவும் கவனமுடன் திறமையாக நிறைவேற்றுவதில் இவர் மிகுந்த அக்கறை காட்டுவார் என்பது இவரிடம் காணப்பட்ட குறிப்பிடத்தக்க பண்புகளில் ஒன்றாகும்.

தற்காலப்போர்ச் சூழலால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த வர்களின் நலன்களைக் கவனித்துப் பராமரிப்பதில் மிகுந்த கடமையுணர்ச்சியுடன் செயற்பட்டார். இவரது சேவையினை இந்தியாவிலிருந்து நாடு திரும்பி வவுனியா மாவட்டத்தில் மீளக் குடியமர்த்தப்பட்ட மக்கள் நன்கறிவர். தன்னையும் இடம்பெயர்ந்த மக்களின் பிரதிநிதியாகக் கருதி அவர்களுக்கு உதவுவதில் நேரத்தை கணக்கிலெடுக்காது சேவை புரிந்தார். உயர் அதிகாரிகளினால் சிறந்த முகாம் இணைப்பாளர் என்ற நற்பெயரைத் தனது செயற்பாடுகள் மூலம் பெற்றுக் கொண்டார்.

சமூகத்தின்சேவையினைச் செய்து கொண்டிருக்கும் வேளையிலே மிகவும் குறைந்த வயதில் அகால மரணம் எனும் கொடியவன் சிறீதரனை நிரந்தரமாக எம் மத்தியிலிருந்து பிரித்து விட்டான். இவரின் பணிகள் எமது சமூகத்திற்குத் தொடர்ந்து கிடைக்காமற் போனது துரதிர்ஷ்டமானது.

வவுனியா மக்களின் அன்புக்குரியவராகச் செயற்பட்ட சிறீதரன் மறைக்கப்பட்டாலும் அவரின் பணிகள் எம்மவர் மனங்களில் நிறைந்து நிழலாடுகின்றன.

1989ல் வவுனியா வடக்கு பிரதேசத்தின் சமூகசேவை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார். இவரது பண்பு கொள்கை ஆகியவற்றிற்குப் பொருத்தமான தொழிலாகவே இது காணப்பட்டது.

தனியே சமூகப் பணியுடன் நின்றுவிடாது, கலை, பண்பாட்டு, விளையாட்டுத் துறைகளிலும் சிறீதரனின் பங்களிப்பு நிறையவே கிடைத்தது. பல விளையட்டுப் போட்டிகளில் நடுவராகத் திகழ்ந்தார். சமூகத்தின் எல்லா வகையான உயர்ச்சிக்கும், மகிழ்ச்சிக்கும் பங்களிப்புச் செய்வதில் மிகுந்த நாட்டம் கொண்டு செயற்பட்டார்.

எமது சிறந்த ஊழியன் ஒருவரை, செயல்திறமையாளனை, கடமை உணர்வாளனை மிகுந்த பிரிவுத் துயருடன் இந்த நேரத்தில் நினைவு கொள்கின்றோம்.

இழப்புக்கள் ஈடு செய்ய முடியாதவை தான் - ஆனால் தவிர்க்க முடியாதவை என மனதைச் சாந்தப்படுத்திக் கொள்வோம்.

இவரின் ஆத்ம சாந்திக்காக எல்லோரும் இந்நேரத்தில் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

**கே. கணேஷ்**
அரச அதிபர் மாவட்ட செயலாளர்
வவுனியா.

APPRECIATION

# LATE MR. THIAGARAJA SRITHARAN, BSC. (HONS)

SOCIAL SERVICE OFFICER AND OIC - UNHCR
REFUGEE CAMP
SITHAMPARAPURAM, VAVUNIYA.

The news of the sudden demise from this mundane world of Late Mr. T. Siritharan the prime of his life within two years of his married life under tragic circumstances, beyond one's imagination, brought crude shock, surprise and profound grief to all those who have known him well and associated with him. Those who are dear and near to the family were in fact dump founded and defend.

I had the privilege and occasion to know him intimately during my tenure of office as the Government Agent of the Administrative District of Vavuniya a boarder district in the Northern Province of Sri Lanka. Immediately after the July 1990 ethnic strife that ended for a shout while which post the write in held for a short stint of 410 days.

As this district was a warden area, massive rehabilitation, resettlement and reconstruction programmes were planned and to be carried out as quickly as possible and to bring about normalcy and development.

I had to commence activities with great challenges and from scratch with skeleton staff. It is then i came to know Mr. Sritharan.

Mr. Sritharan hailed from a respectable family at Nallur in Jaffna. Sritharan was bone on 2nd February 1960. He was the one and the only illustrious son in a family of two children.

Having had his primary education at Saivapiragasa Vidyasalai, Vavuniya and the secondary one at Jaffna Hindu College, jaffna. He proceeded to South India in pursuit of his higher education.

He retumed home with flying colours after receiving his B. Sc. Degree in Botany. He was appointed as Social Service Officer in different stations in the district and lastly at the Kachcheri as Social Service Officer, head Quarters.

He was one of my trusted lieutenats who shouldered responsibilities under trail and turbulent conditions to serve the public most of whom were distressed and looking for relief and redress.

The displaced Tamil people who went to India as Refugees were retuting in batches by ship via Trincomalee.

Amidst difficulties and untold hardships and constrains faced by the district administration in establishing transit camps and maintaing them "Sri" as he was affectionately called by his friends assisted me in many ways working untiringly day

and night beyond duty hours. He was aptly and temperamentally suited for serving the people calmly and patiently. It looking as if he was born to do Social Services and to do higher things towards the making.

What that impressed one was his attitude at a crucial time when his service were required to help the refugees and the affected people.

He proved to be an officer ever prepared and ever ready to perform his functions to the satisfaction of his superiors and the people. He had genuine desire and sincere will to serve the people and reduce their burden.

I was inspired by his feelings he had for the returnees from India. He distinguished himself for honesty, integrity, stern discipline - a rare commodity to be found now a days particular in the public service, diligence to work, stead fastness of purpose, moral rectitude, determination to accomplish tasks entrusted to and expected of him. He was both lovable and dependable. He had a charm and charisma of his own. He was a loveable active Social Service Officer. He attacted the attention of everyone with his simplicity, soberity, calmness, cheerfulness, and love. He was much concerned about the suffering of the people whom he came to serve and assist.

Sri was a versatile and affable officer. His pleasant manners, well disposition, winsome mile captivated the hearts and minds of a wide circle of friends and people. He was large hearted and broad minded in his approach in dealing with problems and finding solutions. He won the love and respect of all who mingled with him and encomiums earned by him well bear testimony to his popularity. He as a tall regal figure and was a tower of strength to me. His contributions were immense, valuable and priceless both in public and private life. Anything could be entrusted to him without hesitation and fear. He was sure to come with success. His results were excellent. He never showed me any sign of relfuctance.

He was knowledgeable, skilful and artful in dealing matters. I was fortunate to have his services. The public service be did aborn with acceptance. If not him I would not have established and urn camps at Vavuniya, thandikulam, Veppankulam, Nelunkulam, Ulukkulam and Ellapar Maurthankula. Such was his capacity, capability, endurance and indefatigability. It is verily said that he was no match to anyone. The credit of having successfully received the returnees from India and treating them all well at camps should go to none other then Sri.

All these go to epitomizes his characted. The sterling qualities in him endeared him to the officers, refugees and the public with whom he moved. At school and after schooling he participated in all extra curricular activities. He displayed his prowess at sports and won colours. He was a devout Hindu and a God fearing person guided by moral principal in all his actions in his life. Thus he moulded himself to be a righteous person.

He led a decent and glorious life with humility and simplicity which could be emulated by others. He served well and earned the name to his family and fame to himself. It is incredible and beyond imagination that Sri would have done anything to be the cause of enmity or envy. Thus could not have had any foe. But the cruel hand

of death that struck so hard unexpectedly and so suddenly makes it hard to believe the Sri is no more.

Never the less he has left an indelible mark in the public service of Sri Lanka and his name would find its due place in the annals of the history of wamni if ever written particulary the Sri Lanka Tamils for whom he has sacrificed his life, the value of which cannot be assessed. The wig in the oil lamp glowed so brightly and sone before it was extinguished. So was Sri during his last days serving marvelously at the Sithamparapuram refugee camp under the UNCHR.

Though Sri is no more, the sorrow is unbearable. His departure has brought irreparable loss to the community. It is hard to fill the the void created by him.

He is no more with us, but we all fell his spirit. We should salute him for his accomplishments in so shout a time in his career. He lived a dutiful, useful and purposeful life a rare achievement. The wife has lost a devoted husband, the parents an illustrious son, the public service a model officer, the friends and colleagues a true friend and the country a patriotic son. He has left his mortal remains and his soul has ascended heaved wards. Sri, you were a man amongst millions. We meet, we greet and we part. That is the tragedy of human life.

To be remembered by those who love, is surely not to die. We miss him badly at a time his services are required but his fragrance memories will linger in our minds and they will be cherished for long in our hearts.

Sri, Good bye, to you. You are no more in this troubled island longing for peace and tranquility but at the feet of His almighty in eternal peace. To console the grieved family I cannot to better than quoting the golden sayings of Sti lanka Sivayoga Swamigal, The Mystic sage of Jaffna.

1. We know no
2. All is truth
3. All was decided long ago
4. There's no evil what so ever

**S. T. Markandu B. A.** (Econ)
Sri Lanka Administrative Service
Deputy Chief Secretary - Finance
Provincial Treasury,
North - East Provincial Council,
Trincomalee and
Formerly Govt. Agent Vavuniya District.

# யாழ்ப்பாண அரசாங்க அதிபர்
# திரு. செ. பத்மநாதன்
## அவர்களின் இரங்கற் செய்தி

அமரர் திரு. பி. ரி. ஸ்ரீதரன் அவர்கள் 1988ம் ஆண்டிற்குப் பின்னர் சமூகசேவை உத்தியோகத்தராக அரச சேவையில் வவுனியா செயலகத்தில் தனது சேவையை ஆரம்பித்தார். அக்காலம் மிக இருண்ட ஒரு காலமாகும். மாவட்டம் முழுவதும் இடம்பெயர்ந்திருந்த நிலையில், அம்மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக, அவர்களுக்கான வீட்டு வசதிகள் அளித்தல், அவர்களை மாவட்டத்தில் நிலையாக இருக்கச்செய்தல் என்பன நிர்வாக முக்கியத்துவத்தில் ஒரு சவாலாக அமைந்திருந்தது. அச்வாலை எதிர்நோக்கும் முகமாக அரசாங்க அதிபர் தலைமையில் பணியாளர், அமரர் திரு. பி. ரி. ஸ்ரீதரன் அவர்கள் எனக்கு உறுதுணையாக இருந்த ஒரு சுறுசுறுப்பான, விடாமுயற்சி கொண்டவர். நான் மாவட்டத்தை விட்டு வெளியேறிய போதும் இவரது வளர்ச்சியில் தொடர்ந்தும் அக்கறையாக இருந்தேன் ஆனால் துரதிஷ்டவசமாக அவருக்கு ஏற்பட்ட அகாலமரணம் வேறு எவருக்கும் ஏற்படக்கூடாத ஒன்று. இதனை நினைத்துப் பார்க்கவே முடியாமல் உள்ளது.

மரணச் சடங்கிற்கு என்னால் கலந்துகொள்ளமுடியவில்லை என்றாலும், இவரது மரணம் தொடர்ந்து எனது மனத்திரையில் வட்டமிட்டுக்கொண்டே இருக்கின்றது. அரவது மரணத்தினால் துயருறும் அவரது மனைவிக்கும், பெற்றோர், உற்றார் உறவினர் அனைவருக்கும் எனது அனுதாபங்கள்.

அவரது ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றேன்.

**செ. பத்மநாதன்**
அரசாங்க அதிபர்
யாழ் மாவட்டம்

செயலகம்
யாழ்ப்பாணம்
30 - 05 - 1996

# பார்ப்பதற்கும் பழகுவதற்கும் இனிய சிறீ

இவரை நீங்கள் அடிக்கடி பார்த்திருக்கிறீர்கள்

அந்த நெடிய நேர்மையான இளைஞனை அடிக்கடி பார்த்திருக்கிறீர்கள். அவருக்கு சின்ன முகம் அந்தச் சின்ன முகத்தை கன்னத்தாடி மூடியிருக்கும் கண்ணாடிக்குப் பின்னால் அருளும் விழிகளிரண்டும் உதடுகளும் மெல்லிய சிரிப்பைச் சிந்திக் கொண்டிருக்க அவர் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பார்.

ஆம் வவுனியாக் கச்சேரியில், நலன்புரி நிலையங்களில் இடம் பெயர்ந்தோர் வரும்வேளை புகையிரத நிலையத்தில், பேரூந்து நிலையத்தில் பார்த்திருக்கிறீர்கள் சிலவேளைகளில் பொழுது போக்குக் களரியில், விளையாட்டு மைதானத்திலும் கூடப் பார்த்திருக்கிறீர்கள்.

அவரிடம் எதைச் சொன்னாலும் "ஓம் சேர் ஓம் சேர்", என ஆமோதித்து அதை நிறைவேற்றும் திறமையினால் எந்தப் பொறுப்பான வேலையையும் இவரிடம் நம்பி ஒப்படைக்கலாம் என்ற நம்பிக்கை அரச அதிகாரிகள் மத்தியில் நிலவியமையும் நன்கு அறிவீர்கள்.

ஸ்ரீ என்றால் எளிதாக இவரை நீங்கள் அடையாளங் கண்டு கொள்வீர்கள்.

உங்களோடு சிரித்துக் கதைத்திருக்கிறார். உங்கள் மேல் மதிப்பு மரியாதை வைத்துப் பண்போடு பழகியிருக்கிறார்.

இவரை இனிப் பார்க்க முடியாது

இவரது செயலாற்றலையும் செல்வாக்கையும் சிலரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை அதனால் உங்களுக்கும் மிகமிகப் பழக்கமான சிறியைப் பார்க்க முடியாமல் செய்துவிட்டார்கள்.

பார்ப்பதற்கும் பழகுவதற்கும் இனிய சிறியின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்போம்.

பலர் வரலாம் ஆனால் சிறியைப்போல ஒருவர் வருவாரா? அவரது இழப்பு இதயத்தைப் பிழிகிறது.

அவரது பிரிவைத் தாங்கக்கூடிய வல்லமையை அவர் மனைவிக்கும் அனைவர்க்கும் இறைவன் அருள இறைஞ்சுவோம்.

**உடுவை எஸ். தில்லைநடராசா**
அரசாங்க அதிபர் - கிளிநொச்சி

# நல் இரங்கல் செய்தி

கடவுளை அடைய மனிதனுக்கு மட்டுமே தகுதியளிக்கப்பட்டுள்ளது. எல்லா உயிரினங்களிலும் தெய்வீக சக்தி இருப்பினும் மனிதன் ஒருவனுக்குத்தான் இதை உணர்ந்து கொள்ளும் உயர் சக்தி இருக்கிறது. இதைத் தான் உப நிஷத்துகள் சைதன்யம் என சொல்கின்றன. இதையே எல்லா மதங்களும் போதிக்கின்றன. இராம கிருஸ்ண பரமஹம்சர் போன்ற மகான்களும் இதையே சொல்லியிருக்கின்றனர். இந்த உயர் சக்தி பெற்ற மனிதன் அதைப் பயன்படுத்தி இறைவனையடைய என்ன செய்ய வேண்டும் ? நூறு உபன்னியாசங்களை கேட்பதைவிட, புண்ணிய நூல்களை படிப்பதைவிட, புனிய யாத்திரை ஸ்தலங்களைத் தரிசிப்பதைவிட, புனித தீர்த்தம் ஆடுவதைவிட, மானிட சேவை செய்வதே மிகச் சிறந்ததாகும்.

**மானிட சேவையே**
**மகேசன் சேவை**

இவ்வாறு மானிட சேவை செய்யும் வாய்ப்பு நம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அதற்கும் பூர்வபுண்ணிய பலன் வேண்டும். இதனாலன்றோ ஸ்ரீதரன் அவர்கட்கு நடமாடும் தெய்வங்களான மானிடர்களுக்கு இடையறாத சேவையாற்றும் வாய்ப்பை அளித்த சமூக சேவை அலுவலர் பதவி கிடைக்கப்பெற்றது. அவர் தனது சேவைக்காலத்தில் எமக்கெல்லாம் ஓர் உதாரண புருஷராக வாழ்ந்தார். அவரது எளிமையும், சேவை மனப்பான்மையும், சுயநலமற்ற, தன்மையும் கீழ்ப்படிவும் அவரைப் புகழின் உச்சிக்கே இட்டுச் சென்றன. அதன் பயனாக அவர் இறைவனின் பாதார விந்தங்களுடன் இணைந்திருப்பார் என்பதில் ஐயமே இல்லை.

*சாந்தி சாந்தி சாந்தி*

**சி. இரகுநாதபிள்ளை**
மேலதிக அரசாங்க அதிபர்
வவுனியா மாவட்டம்

1 பூங்கா வீதி
வவுனியா.

# எம் நெஞ்சினை விட்டகலா மக்கள் சேவகன் சிறீ

சிறீ என செல்லமாக அழைக்கப்படும் திரு. தியாகராசா சிறீதரன் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர். வவுனியாவில் வளர்ந்தவர். விஞ்ஞானப்பட்டதாரி. 1990ன் முற்பகுதியில் நெடுங்கேணி செட்டிக்குளம் வவுனியா பிரதேச செயலகப் பகுதிகளில் சமூக சேவை உத்தியோகத்தராகப் பணிபுரிந்தவர்.

மக்கள் சேவையே மகேசன் சேவை
ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்
என்கடன் பணி செய்து கிடப்பதே

போன்ற பெரியோர்களின் பொன்மொழிகளிற்கு ஏற்ப மக்கள் தொண்டினை கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் நிறைவு செய்தவர்.

1990ம் ஆண்டு யூன் மாதம் வவுனியாவில் ஏற்பட்ட வன்செயலினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் வவுனியா செட்டிக்குளம் பகுதிகளை விட்டு இடம்பெயர்ந்து நிர்க்கதியாகி இலங்கையின் பல பாகங்களிற்கும் இந்தியாவிற்கும் அகதிகளாகச் சென்றார்கள் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சகஜ நிலைமையின்போது மக்களை மீளக் குடியமர்த்தும் பணி பெரும் சவாலாக அமைந்தது. இந்தியாவிலிருந்து மீளும் மக்களை தத்தம் சொந்தப் பிரிவுகளிற்கு மீளக் குடியமர்த்த முன்பு பக்குவப்படுத்தி நன்னிலைப்படுத்த ஆசிகுளம் அடப்பன்குளம் ஆகிய கிராமங்களில் யு. என். எச். சி. ஆர் உதவியுடன் நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டன. அந் நலன்புரி நிலையங்களை நிறுவுவதிலும் அங்கு வாழ்ந்த மக்கள் தேவைகளை நிறைவேற்றுவதிலும் சிறீயின் பங்களிப்பு மறக்க முடியாதது. சிதம்பரபுர நலன்புரி நிலையப் பொறுப்பதிகாரியாக குறுகிய காலப்பகுதியில் தன் சேவையால் மக்களால் தெய்வமாகப் போற்றப்பட்டார். அரச யு. என். எச். சி. ஆர். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டார். அதனால் உந்தப்பட்ட சிறீ சிதம்பரபுரம் மீளக் குடியமர்வு கிராமத்தினை உருவாக்குவதிலும் முன்னின்று உழைத்தார்.

இவ்வாறாக தன்னலம் கருதாது பணியாற்றிய மக்கள் சேவகனிற்கு சமூகம் வழங்கிய பரிசுதான் என்னே ? அன்பு நெஞ்சங்கள் மறக்குமா ?

சிந்தாமணிப் பிள்ளையார் முன்றலில்நாற்சந்தியில் நன்கு வளர்ந்த பருத்த மரம் சிறீயின் கதையினை எடுத்து இயம்பிக் கொண்டே இருக்கும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.

என்னும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப சிறீ வானுலகில் தெய்வமாகிட்டார். அவர் நினைவு எங்கள் நெஞ்சங்களில் பசுமையாக நிலைத்து நிற்கும்.

வாழ்க அவர் நாமம்.
தொடர்க அவர் பணி......

**ச. பரமகுலசிங்கம்** (B. A. (Cey.)
திட்டப்பணிப்பாளர்.

# அனுதாபச் செய்தி

அமரர் பொன்னுத்துரை தியாகராஜா ஸ்ரீதரன் 01-11-1996ல் சமூகசேவை உத்தியோகத்தராக அரச சேவையிலஅடியெடுத்து வைத்தார். தாம் பெற்ற பதவிக்கேற்ப இம்மாவட்டத்திற் சமூக சேவை வேலைகளிலெல்லாம் இவர்பணி சிறந்தோங்கியது. இம்மாவட்டத்திற்கு இவர் பிரவேசித்த காலம் நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களால் மக்கள் அல்லலும் அவதியுமுற்று இடம் பெயர்ந்து கொண்டிருந்த காலம் இவ்வேளையில் இறப்புக்களும் இழப்புக்களும் சர்வசாதாரணமாக விருந்தன. இம்மாவட்டத்தில் மக்கள் எங்கெங்கு அவதியுற்றனரோ அங்கெல்லாம் விரைந்து சென்று பணிபுரிந்தவர் அமரர். ஸ்ரீதரன். கச்சேரியிலும் இப்பிரதேச செயலகத்திலும் இவர் கடமையாற்றியபோது ஒரு குறுகிய வட்டத்தினுள்மட்டும் நின்று செயற்படாது பரந்தளவில் சேவைபுரிந்தார். இம்மாவட்டத்தில் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களின் நலன்களிற் தனிப்பட்ட அக்கறை செலுத்தி அம்மக்களை அன்புடன் அரவணைத்து அவர்களின் துயரைத் தனது துயராகக் கருதிச் செயலாற்றினார். அம்மக்களின் நன்மையிலும் தீமையிலும் பங்கெடுத்தது மட்டுமின்றி அவர்களது கல்வி விளையாட்டு மற்றும் நலனோன்பு விடயங்களிலும் கவனம் செலுத்திக் கருமமாற்றினார்.

அமரர் ஸ்ரீதரனிடம் காணப்பட்ட சிறப்பான பண்பு தன்னுடன் சேர்ந்த தனக்கு கீழ்மட்ட உத்தியோகத்தர்களுடன் அன்புடனும் பண்புடனும் பழகியது மட்டுமன்றி தனக்கு மேற்பணி புரிந்த அதிகாரிகளின் பணிப்பை சிரமேற்கொண்டு அவர்களை மதித்து புன்முறுவலுடன் பணிபுரிந்தமையையும். ஒரு கடமையைச் செய்யவேண்டுமென நாம் பணிக்குமுன் ஸ்ரீ என்று அழைத்தவுடனேயே விரைந்து வந்து செயலாற்றிய விதம் எம்மனதைவிட்டு ஒருபோதும் நீங்காது. சிதம்பரபுரம் மீள்குடியேற்றக் கிராமத்தில் 200 குடும்பங்கள்தமது வாழ்வின் புதிய பாதையில் அடிவைக்க இரவு பகலாகக் கடமையாற்றி அம்மக்களைக் குடியமர்த்த எமக்குப் பெரும்துணை புரிந்து கொண்டிருந்த சமயம் அத்திட்டத்தின் திறப்பு விழா வைபவத்திற்கூட கலந்து கொள்ள சந்தர்ப்பத்தைக் காலன் விடவில்லை.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்**
**வானுறையுள் தெய்வத்துள் வைக்கப்படுவர்**

என்பதற்கொப்ப தனது பூதவுடலைச் சிறியவயதில் அகாலநிலையில் நீத்துப் புகழுடல் பெற்ற அமரர் தியாகராஜா ஸ்ரீதரன் இறைவன் சந்நிதியில் நிரந்தரமாக வீற்றிருந்து தனது துணைவிக்கும் பெற்றோருக்கும் உற்றாருக்கும் அருள்பாலிக்க வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**திருமதி. மே. அற்புதராஜா**
பிரதேச செயலாளர்
வவுனியா.

# மானுடம் தோழமையாக

நிமிர்ந்த நடை
நேரிய நோக்கு
குனிதல் இலாத கொள்கை
கனிவு கடமை உயர்வு
விருப்பு - வெறுப்புக் தாண்டி
உறவும் இயல்பு
உனக்குச் சொநத்மானவை

எல்லா மனிதர்க்கும் இருக்க வேண்டிய
இயல்புகள் தான் இவை
ஆயினும் ஏன் ? இவை
சிலருக்கு மட்டும் சேர்மதியாகிறது
இங்குதான் பிறரிடமிருந்து
நீ வித்தியாசப்படுகிறாய் அன்பனே
இவற்றால் எல்லாம் வீண் பெருமை கொள்ளாமல்
இயல்பினால் சாதாரணன் போலவே திரிந்த
மனிதன் நீ
ஆயிரம் முறை அழுத்திச் சொல்கிறோம்
நீ மனிதன் மனிதன் தான்

மானுடம் உன்னிடம் உயிர்ப்புடன் கடர்ந்தது
மானுட விழிகள் நேரிய பார்வை கொண்டிலங்கின
மானுட இதயம் பிறருக்காகவும்
துடித்தபடி இருந்ததது
மானுடம் தோழமையாக இம் மண்ணில் நடந்தது.
மானுட நோக்கை
மானுட இதயத்தை
மானுடத் தோழமையை நாமும் வரித்தால்
அன்ப! நாம்
சாகாமையை உனக்கு நல்குபவர் ஆகிறோம்

ஊனுடம்பு இற்று வீழ்ந்த போதினும்
மானுடா உனது உயரியல் பினால்
நீ உயிர்ப்புடன் இருக்கிறாய்

இறப்பிலும் எல்லோராலும்
நினைக்கப் படுகிறாய்

உயிர்ப்புடன் இருக்கும் இயல்பை
உன்னிடமிருந்து நாம்
கற்றுக் கொண்டால்
மானுடத்திற்காக நாம்
மடிப்பிச்சை கேட்க நேரிடாது.

உயரிய இயல்பை நாமும் வரித்துக் கொண்டால்
மானுடம் மண்ணில் உயிர்ச்சுடராய் இலங்கும்
உயிரின் சுடரை ஏற்றி வைப்போமாக.

**சொ. அமிர்தலிங்கம்**
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை

---

காலம் சென்ற திருவாளர் பொ. சி. சிறீதரன் வடக்கு கிழக்கு மாகாண சமூக சேவையாளர் அலுவலர்களின் தொழிற்சங்க ஆரம்பகால உறுப்பினராவார். வடக்குகிழக்கு மாகாண சமூக சேவை அலுவலர்களின் சேவை மேம்பாட்டிற்காக தனியான ஒரு தொழிற்சங்கம் உருவாக்கப்பட வேண்டுமென்ற கருத்திற்கு செயல்வடிவம் கொடுத்து முன்னின்று உழைத்தவர்களில் திரு. சிறிதரனும் ஒருவராவார் தொழிற்சங்கம் அமைக்கப்பட்டு செயற்பட்டுவந்த காலங்களில் அதன்வளர்ச்சிக்கு பெரிய பாடுபட்ட இவர் சிறிதுகாலம் சங்கத்தின் செயளாலர் பதவியையும் ஏற்று திறம்பட வகித்துவந்தார்.

என்றும் கடமையே கண்ணாகக்கொண்டு உழைத்த திரு. சிறீதரன் குறிப்பாக அகதிகள் மற்றும் நிர்கதிகட்குள்ளானோரது சேவைக்காக தன்னை அர்ப்பணித்து ஆற்றியசேவை மக்கள் சேவைக்காக பாடுபடும் எல்லோருக்கும் ஒரு உந்து சக்தியாக விளங்கியது.

மக்கள் சேவையின்போது அவரை எதிர்கொண்ட பயங்கரமான மரணம் எல்லோரையும் பேரதிர்ச்சியில் ஆழ்த்தியது.

அவரின் ஆத்மா இறைவன் திருவடியில் நிலைக்க பிராத்திக்கிறோம்

**த. கிருபாகரன்**
செயலாளர்
வடக்குகிழக்கு மாகாண சமூகசேவை அலுவலர்களின்
தொழிற்சங்கம்

காலஞ்சென்ற திரு. சிறிதரன் சமூகசேவை உத்தியோகத்தர் அவர்கள் 1991ம் ஆண்டு வவுனியாக் கச்சேரியில் நான் கடமையைப் பொறுப்பேற்ற போது அன்றைய அரச அதிபர் திரு. மார்க்கண்டு அவர்களால் நேர்மையும், திறமையும், சேவை மனப்பான்மையும் கொண்ட உத்தியோகத்தர் என அறிமுகப்படுத்தப்பட்டார். அன்றிலிருந்து அவர் இறக்கும்வரை அவரை சமூகசேவையாளனாக, தியாகம் நிறைந்தவராக, ஏழைகளின் தோழனாக, அமைதியும், பண்பும், பணிவும் கொண்ட அலுவளனாகப் பலவடிவங்களில் கண்டு வியந்துள்ளேன். இருபத்தி நான்கு நேரமும் அரச கடமைக்கெனத் தன்னை அர்ப்பணித்து எந்த நேரத்தில் எக் கடமையை, எவர் சொன்னாலும் இன்முகத்துடன் ஏற்று செவ்வனே நிறிவேற்றும் சிறியின் மனவலுவை நான் மானசீகமாகப் பாராட்டியதுண்டு.

இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு என்னிடம் முகாம் செல்ல அனுமதிகேட்டபோது இதுவரை பூரணமாகாவிருந்த சகல வேலைகளையும் தான் நிறைவேற்றிவிட்டதாகத் தெரிவித்து விடைபெற்ற காட்சி இன்றும் என் நினைவில் உள்ளது. இவரது இழப்பு சமூகத்திற்கும் ஏழைகளிற்கும், அலுவலகத்திற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது பிரிவால் வாடும் இளம் மனைவி, பெற்றோர், சகோதரி, உறவினர், நண்பர்கள் அனைவரதும் துன்பத்தில் நான் பங்கு கொள்கின்றேன்.

அவரது ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**S. M. சாள்ஸ்**
உ. அ. அதிபர்
(தலைமைப்பீடம்)
வவுனியா.

# வாழ்வாங்கு வாழ்ந்த பண்பாளன் சேவைக்கோரு ஸ்ரீதரன்

பிறந்தவரனைவரும் இறப்பது நியதி இதிலிருந்து எவரும் விலக இயலாது ஆனால் வாழ்ந்த காலம் குறைவென்னும் மனித சமூகத்தின் மேம்பாட்டுக்காக ஆற்றிய பங்களிப்பும் பொது நல நோக்கும் சேவையின் அர்ப்ப'ணப்பும் கொண்டு வாழ்ந்த முறையால் மக்கள் உள்ளங்களில் நிரந்தரமாக வாழும் சான்றோரும் உண்டு. இத்தகைய சான்றோர்களுள் ஒருவராக விளங்குபவர் அண்மையில் மீளாத் துயில் கொண்ட திரு. தியாகராஜா ஸ்ரீதரன் அவர்கள் ஆவார்.

சமூகசேவை உத்தியோகத்தராக வவுனியா கச்சேரிக்கு அவர் வருகை தந்த காலத்திலிருந்தே அவரை அறிவேன். விவசாய விஞ்ஞானியாக சமூக விஞ்ஞானியாக மிளிர்ந்தார். ஏழைகளுக்கும் ஊனமுற்றோருக்கும் சேவை செய்ய ஆரம்பித்த அவர் அரசபணி அல்லற்பட்டு ஆற்றாது இடம்பெயர்ந்து வந்து நிர்க்கதிக்குள்ளாகிய மக்களுக்கு உண்டியும் உறையுளும் உதவும் பணிகளையும் உள்வாங்கி விரிந்து பரந்து வெளிநாட்டிலிந்து தாயகம் திரும்புவோரையும் வரவேற்று உபசரித்து அவரவர் இடங்களுக்கு அனுப்பி வைத்தும் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாதவர்களுக்கென அரசினால் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களைப் பேணியும் அவற்றின் பொறுப்பதிகாரியாக விளங்கிக் குன்றின் மேலிட்ட விளக்காக உயர்ந்து திகழ்ந்தார். அவரது சேவை விரிந்து பரந்து உயர்ந்து திகழத் திகழ அவர் நாமமும் உருவமும் மக்கள் மனங்களில் ஆழ்ந்து அகன்று வேரோடி நிலைபெற்றன.

முதலில் சில காலம் உதவி திட்டப்பணிப்பாளராகவும் திரு. தியாகராஜா ஸ்ரீதரனுடன் வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றியுள்ளேன். இரவு பகல் பாராது மேலதிகாரிகளுக்கு எவ்வித சிரமமும் வைக்காது நலிந்தோர் வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர் இவர். இத்தகைய பண்பாளர் ஒருவரை காண்பது அரிது இவரோடு தொடர்ந்து கொண்ட அனைவரது உள்ளங்களிலும் நிலைத்து வாழ்வார் அன்னாரின் ஆத்ம சாந்தியடைவதாக.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வாலுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்.

**க. ஜயம்பிள்ளை**
பிரதேச செயலாளர்
வவுனியா வடக்கு

# நினைவில் நிறைந்தவர்

அன்பிற்குரிய அமரர் தியாகராசா சிறீதரன் எனக்கு மட்டுமல்ல இந்த நாட்டில் சொத்துசுகம் அனைத்தையும் இழந்து அகதிகளாக இடர்பட்டு துயருற்ற ஆயிரம் ஆயிரம் மக்கள் மனதிலும் என்றும் நிறைந்திருப்பார்.

**ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்**
**மாண்டார் வருவாரோ . இம் மானிலத்தில்.**

இது உலகநியதி இதையாரும் மாற்றவோ மறுக்கவோ முடியாது. உலகில் பிறந்தோர் அனைவரும் இறப்பது உண்மையே. எனினும் பலர் இறக்கிறார்கள்சிலர் பிறரால் கொலைசெய்யப்படுகிறார்கள், இப்படியாக அழிக்கப்படுகிறது உலகநியதி என்று ஏற்றுக் கொள்ளமுடியாது இருக்கிறது. இந்நிகழ்வுக்கு விடைகாண்பதரிது. சுலபமான விடை ஊழ் இது ஏற்புடையதோ இல்லையோ, இக்கூற்றை மறுதலித்து விடைகாண்பது முடியாது.

சுருங்கக் கூறின் இறைபணியை மனிதர்கள் செய்கிறார்கள் இதிலும் இறைவன் செய்விக்கிறார் என்று அன்பே உருவான இறைவன் மேல் பழிபோடுவது சுலபம். இவ்விழி செயலை செய்பவர்கள் இறை கருவிகளானாலும், இறை பணியில் செல்பவர்கள் அல்ல ஆனால் இழி செயலில், இறைநிந்தனையில் ஈடுபடுபவர்கள் இவர்களும் இறைபணியாளர்களா என சிந்திக்க வேண்டியுள்ளது. இது உண்மை ஆனால் சமுதாய சீரமைப்பை ஏன் மேற்கொள்ளவேண்டும். கே[illegible] கெட்டவர்கட்கும் இறைபணி உண்டேயாகும். இளங்கோ அடிகளிலிருந்து இன்று வரைக்கும் விடைகாணமுடியாத உலக நியதி ஊழ்வினை. ஊழ்வினை தான் எம்மை இட்டுச்செல்கிறது எனில், இறைவனின் பணி என்ன ? என்ற கேள்வி எழும், அதுமட்டுமல்ல இறைபணியும் இறை வழிபாடும் எதற்கு தற்காலத்தில் இறை பணியிலும் சித்து விளையாட்டலும் உலக கணிப்பை ஈர்த்துள்ள பெரியார்களாலும் கூட தம் முன்னால் ஒருவர் கொலை செய்யப்படுவதை தடுக்கவோ, தவிர்க்கவோ அன்றி அவருக்கு மீண்டும் வாழ்வு கொடுக்க முடியாதிருந்ததை நாம் அறிவோம். ஆகையால் நாம் எங்கு செல்கிறோம் இதற்கு விடை இறைவன் உலகை இயக்கும் உந்து சக்தி, ஊழிகாலவலு இது தனிப்பட்டவர்களை கூட்டிக் கழித்து கணக்குப் போடும் ஒரு வாணிப செயலகமோ கணனியோ அல்ல என்பதாகும்.

இந்த உலக மகா வலுவின் அலகுகள் தான் உலகில் உள்ள அனைத்தும் என்பதே உண்மை அப்போ இறை வழிபாடு ஏன் என்றகேள்வி எழும். அது நாமும் இந்த உந்து வலுவின் அலகுகள், அந்த வலுவின் இறை பொருளின் ஒருசிறு துளி எம்மில் உள்ளது, அதை ஒருவழிப்படுத்தி எம்மை நல்வழிப்படுத்தவே ஆகும். நம்மை தீமைக்கு அப்பாற்பட்டதே அது. இதை விடுத்து சித்து விளையாட்டு செய்பவர் பின் செல்வதோ இறைவனுக்கு தேவபாடையில் வடமொழியில் உயர் குலத்தவர் மூலம் கூலி வழிபாடு செய்வதே மூடநம்பிக்கையே யாகும்.

ஆகவே இறைவன் மேல் பழி போடாது நம்மை நாம் ஒரு வழிப் படுத்திக் கொள்வோம்.

நாம் கொண்ட கருப்பொருளுக்கு வருவோம் அன்பிற்குரிய சிறிதரனை சிறு பருவத்திலிருந்து நன்கு அறிந்தவன் நான். அவர் வளர்ச்சியை ஓரளவு நேரடியாக கண்காணிக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. 1984ம் ஆண்டு காஞ்சியில் இடம் பெற்ற தென்னிந்திய செங்குந்தர் குல மாநில மாநாட்டுக்குச் சென்றபோது சிறிதரனும் தந்தையார் திரு. தியாகராசாவம எம்மோடு அங்கு வந்து மாநாட்டில் பங்கு பற்றியது மல்லாது அவ்வேளையில் அவரது பல்கலைக்கழக உயர் கல்விக்கும் அடித்தளமிடப்பட்டது. நன்கு கற்று சிறப்பாக பட்டம் பெற்று நாடு திரும்பினார்.

சமூக சேவை அலுவலர் ப்தவிக்கு இலக்கணம் வகுப்பார் என்று தெரியாத அந்த நாளில் அப்பதவியைப் பெறுவதற்கும் என்னாலான உதவி செய்தேன் இப்பதவியில் சீரும் சிறப்புடன் செயல்பட்டு அப்பதவிக்கே பெருமை தேடியதுமல்லாது தாம் சேவை ஆற்றிய சகல மேலதிகாரிகளினது அன்பையும் நன்மதிப்பையும் பெற்றுள்ளார் என்பது அவரது கொலையாளிகள் உட்பட நாடறிந்த உண்மையாகும்.

கடந்த மூனற்ாண்டுகளாக அவரது பணிகளை ஒருகிணைக்கும் பொறுப்பு என்னைச் சார்ந்தது.இக்கடைசிக் கால கட்டத்தில் அவரது முழு மனத்துடனான சமுதாயசேவையை அனுபவித்து உலகையுற்றவருள் அடியேனும் ஒருவன். எந்த பணியையும், முடியாது என்றோ, அது தனது கடமைக்குட்பட்டது என்றோ, எந்நாளும் கூறியது கிடையாது. எப்பணியையும் சிரமேற்கொண்டு பொறுப்பேற்கும் சீரிய பண்பாளன் அன்பா சிறிதரனாகும்.

என்னோடு பணி செய்த காலத்தில் தனக்கென்று எதும் கேட்டதை நான் அறியேன். தன்கீழ் சேவை செய்பவர்கள் மேல் பழிபோட்டு தப்பும் எண்ணம் என்றும் இருந்ததில்லை, அவர்கள் தவறுகட்கும் தாம் பொறுப்பேற்று சகலரையும் ஒருகிணைத்து செயலகத்திலும் குடும்பமாக சேவை செய்த பண்பாளர் என்பது உண்மை.

இவை எல்லா வற்றுக்கும் மேலாக, நம்நாட்டில் அகதிகளான ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேண்டிய சேவைகள்ள காலநேர கணிப்புக்கு அப்பாற்பட்டு கடமையைத் தொண்டாக நிறைவேற்றி அவர்கள் மனதில் நீக்கமற நிறைந்தவர் என்று கூறினால் அது மிகையாகாது அவர் வாழ்விலும் வளத்திலும் திருமணத்திலும் பங்கேற்ற நாம் இவ்வளவு சடுதியாக தாள்விறும் இழப்பிலும் பங்கேற்கும் நிலை ஏற்பட்டது இன்றும் எமது மனதை உறுத்துகிறது.

பெற்றோருக்கு தலைமகனாக, ஒரேமகனாக பிறந்து சீரும் சிறப்புடன் வாழ்க்கை தோணியில் நங்கை நல்லாளுடன் கையேற்று வீறுநடைபோட்ட வேளையில் காலன் காலை வாரிவிட்டான். இன்று தலைமகனை இழந்து தவிக்கும் பெற்றோருக்கும் தங்கைக்கும் கைப்பிடித்த வாழ்க்கைத்துணையை பிரிந்து கையறுநிலையில் பரிதவிக்கும் நங்கை நல்லாளுக்கும் எப்படி ஆறுதல் மொழி கூறுவது என்பதை அறியாது வந்தும் நாமும் அவர்களது துயரில் பங்கேற்று இறைவன் திருவடியில் ஒருகிணைந்து இறுக பற்றுவோமாக.

இதுதான்
மனித வாழ்க்கை

**செல்வா**

# காலம்சென்ற சமூகசேவை உத்தியோகத்தர்
# திரு. பி. ரி. சிறீதரன்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக சமூக சேவை உத்தியோகத்தராக கடமையாற்றி எதிர்பாராத விதமாக காலன் வசமாகிவிட்ட திரு. பி. ரி. சிறீதரன் அவர்களை நான் நன்கு அறிவேன். பெற்றுக்கொண்ட பதவிக்கேற்ப சிறந்ததோரு சமூக சேவையாளராக மக்கள் மத்தியிலே இவர் விளங்கினார். வவுனியா செயலகத்திலே நான் உதவி சமூக சேவைப் பணிப்பாளராக கடமையாற்றியபொழுது இவரையும் இவரதுனிய பண்பு நலன்களையும், இவர் தன்னகத்தே கொண்டிருந்த விழுமியங்களையும் நான் நன்கு அறிவேன்.

தன்னை உருக்கி ஒளி கொடுக்கிற மெழுகுதிரி போல், தன்னை அரைத்து நானிலமெங்கும் மணம் கமிழ்கின்ற சந்தனத்தைப்போல் இவர் உயிரையே தியாகம் செய்து மக்களுக்கு தன்னை மறக்க முடியாத நினைவுச் சின்னமாக விட்டுச் சென்றிருக்கிறார்.

அலை பரப்பி ஒலி எழுப்பும் கத்தும் கடல், அகல பரந்து விரிந்திருக்கும் ஆகாயம், நெடிதுயர்ந்து நிற்கும் இமயம், அகிலம் எங்கும் ஒளி பரப்பும் கதிரும், தண்மதியும் இவைகள் இருக்கும் வரையும் இவரது புகழ் வாழ்ந்தே தீரும்.

வாழ்க சேவைக்கோர் செம்மனச் சிறிதரன்
வளர்க அவரது பணி
நிறைக அவர் ஆன்ம சாந்தி

**செல்வி ரி. துரைசாமி**
பிரதேச செயலாளர்
செட்டிக்குளம்.

## APPRECIATION
## THIAGARAJAH SRITHARAN

Thrity Six Year old Thiagarajah Sritharan, B. Sc. (Hons.) joined as a Social Services Officer on 01-11-1989 and was -posted to the Vavuniya, Kachcheri.

He functioned as the Co-Ordinating Officer of the Refugee Camp at Sithamparapuram, run by the UNHCR, at the time of his death.

He was very popular and ran the Refugee Camp with exceptional ability.

He had a good athletic figure and participated in Sports to a great extent. His Father also worked at the Kachcheri in the Clerical service.

He has lefter behind a Young sorrowing wife whose grief is immeasurable.

May he attain "Moksha' and enter the kingdom of Heaven, as an innocent victim of unbridled brutality.

**C. Marcandayor,**
Chairman
Sri Lanka Red Cross,
Vavuniya.

அன்புடையீர்

காலம் சென்ற அமரர் திரு. சி. சிறீதரனின் மறைவு காலத்திற்கு முந்திய ஒரு துர்ப்பாக்கிய நிகழ்வாகும். அன்னார் மக்கள் சேவைக்கு ஒரு உதாரண புருஷர். தனது நீடித்த அயராத தொண்டாற்றுதலால் வவுனியா பிரதேச குறிப்பாக ஆசிகுளப் பகுதி மக்களின் மனங்களிலெல்லாம் நீங்காத இடம் பிடித்துக் கொண்ட ஒரு நல்ல மனிதர்.

தான் அரச சேவையில் ஈடுபட்டுக் கொண்டிந்த போதும் தனது கடமை வரையறைகட்கு அப்பாலும் சென்று பரிகாரம் தேடியவர்கள் சலிப்போடு வீடு திரும்பாத வகையில் பணியாற்றும் பண்புடையவராகத் திகழ்ந்தார்.

பல்வேறு கொடுமைகளும் அல்லல்களும் நிறைந்துள்ள இன்றைய கால கட்டத்திலே உரிய அதிகாரிகளுடன் உரிய நேரத்தில் தொடர்புகொண்டு மக்களுக்குப் பரிகாரம் பெற்றுக் கொடுப்பதில் அவர் காட்டிய ஆவலும் அக்கறையும் இப் பிரதேச மக்களின் மனதை விட்டு அகல மாட்டாது.

அமரர் திரு. சி. சிறீதரன், சோர்வடைந்து துன்பத்திலும் துயரத்திலும் துடிக்கின்ற மக்களுக்கு துடுப்பாக விளங்கிய நல்லாளர்.

நல்லவர்கள் மறைவதில்லை அவர்கள் நம்முடனே எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவரது நல்ல தொண்டு மக்கள் மனதைவிட்டு நீங்காது நிலைத்திருக்கும்.

DR. ஏ. ஞா. ஞானகுணாளன்



## வவுனியா தெற்கு பிரதேச செயலாளரிடமிருந்து.....

வவுனியா மாவட்டத்தில் வவுனியா பிரதேச செயலாளர் தொகுதிக்கு சமூக சேவையாளராகப் பணி புரிந்த பி. ரி. சிறிதரனுடைய மரணத்திற்குப் பின்பு அவருடைய ஞாபகார்த்த மலரிற்கு ஒரு செய்தியை வழங்குவதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்தமைக்காக நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

1989 வவுனியா கச்சேரியில் சமூக சேவையாளராகச் சேவை-யிலீடுபட்ட அவர் மரணமடையும் வரை ஒரு நாளில் கூடிய நேரங்களில் மக்களுக்காகத் தொழில் புரிந்தவர். தனது சேவைக்கு மேலதிகமாக சிதம்பரம் சமூகசேவை இல்லத்தில் பொறுப்பாளராகப் பணிபுரிந்த இவர் அங்கு எல்லாருடைய அன்பையும் பாராட்டத்தக்கதாக நேர்மையாகவும் பொறுமையாகவும் பணிபுரிந்தார் என்பதை நான் நன்றாக உணர்வேன். இது உண்மையான விடயமாகும்.

தனது சேவைக் காலத்திற்குள் சாதி, மத பேதமின்றி எல்லோருக்கும் ஒரேமாதிரிச் சேவைபுரிந்த அவர் அப்பிரதேசத்திலுள்ள பொதுச் சேவையுடன் இணைந்து அதுமூலமாகவும் மக்களுக்குச் சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சி செய்தார்.

முழுச் சமூகத்திற்கு எடுத்துக்காட்டாகவும் எல்லோராலும் பாராட்டத்தக்கதாக அரசாங்க சேவையில் ஈடுபட்ட சிறிதரன் சிதம்பரபுரம் பொதுசேவை இல்லத்தில் ஈடுபட்ட அவருக்கு அகால மரணம் ஏற்பட்டதற்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எச். எம். தர்மபால**
பிரதேச செயலாளர்,
வவுனியா தெற்கு

## වවුනියා. දකුණ ප්‍රදේශීය ලේකම්ගෙන්.....

වවුනියාව දිස්ත්‍රික්කයේ වවුනියාව ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාශයට අනුයුක්තව සමාජ සේවා නිලධාරියෙකු ලෙස සේවය කල ජී. ටී. ශ්‍රීධරන් මහතාගේ අභාවයෙන් පසු ඔහුගේ සමරු පොතට පණිවිඩයක් තැබීමට අවස්ථාව ලබාදීම පිළිබඳව ස්තුතිවන්ත වෙමි

1989 වවුනියාව දිසාපති කාර්යාලයේ සමාජසේවා නිලධාරියෙකු ලෙස රජයේ සේවයට පිවිසුන ඔහු මියයන තෙක්ම දවසේ වැඩි කාලයක් ජනතාව වෙනුවෙන් කැපකරන ලදී. සිය රාජකාරිවලට අමතරව සිදම්බරපුරම් සුභසාධක මධ්‍යස්ථානය භාරව කටයුතු කල මොහු එහි සැම දෙනාගේම ආදරය දිනාගෙන අවංකවත් නිහතමානිවත් කටයුතු කල මට මා හොඳින් දන්නා කරුණකි.

සිය සේවා කාලය තුල ජාති, ආගම්, කුල භේදයෙන් තොරව සියලු දෙනාටම එකසේ සේවය කල ඒ මහතා ප්‍රදේශයේ ක්‍රියාත්මක ස්වේච්ඡා සංවිධාන සමග සම්බන්ධ කටයුතු කරමින් ඒ මගින්ද ජනතාවට සේවයක් ලබාදීමට උත්සාහ දරණ ලදී.

මුළු සමාජයටම ආදර්ශමත් රජයේ සේවකයකු වූ ශ්‍රීදරන් මහතා සිදම්බරපුරම් සුභසාධක මධ්‍යස්ථානයේ සේවයේ යෙදී සිටියදී අකල් මරණයකට පත්වීම පිළිබඳව මාගේ සාතිශය සංවේගය මෙයින් පලකර සිටිමි.

සේ. මු. ධර්මපාල
ප්‍රාදේශීය ලේකම්
වවුනියාව දකුණ.

சிறியின் சமூக வாழ்வின் ஒரு பகுதி......





# யாழ் இந்து உருவாக்கிய உத்தமன்

நான் காலம் சென்ற திருவாளர் பொ. தி. சிறிதரன் அவர்களை 1989ம் ஆண்டு கார்த்திகை மாதம் அவர் வவுனியா மாவட்டத்தில் சமூக சேவை அலுவலராக பணிபுரிய நியமனம் பெற்ற காலத்திலிருந்து அறிவேன், சீரிய சைவப் பண்பும் ஒழுக்கமும் நிறைந்த மிளிர்ந்த குடும்பத்தில் பிறந்த திரு. சிறிதரன் என்னோடும் என் சக நண்பர்களோடும் எனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சுமார் இரண்டு வருடங்களுககு மேலாக வசித்து வந்தார். ஒரு சமூக சேவையாளனுக்குரிய பண்புகளை, செயற்றிறன்களை திரு. சிறிதரன் அவர்கள் பெற்றிருந்தார். அகதிகளுக்காக, அனாதைகளுக்காக பாதிக்கப்பட்டோருக்காக தனது காலத்தை முழுமையாக அர்ப்பணித்து செயலாற்றிக் கொண்டிருந்த அவர் வவுனியா மாவட்டத்தில் சகலராலும் நன்கு மதிக்கப்பட்ட ஒரு திறமை வாய்ந்த அரசஅதிகாரியாக சேவையாற்றிவந்த காலத்தில் அவரை எதிர் கொண்ட பயங்கரமான மரணம் மிகவும் துர்அதிஷட்மானதாகும். யாழ் இந்துக் கல்லூரி உருவாக்கிய உத்தமமான மனிதர்களில் ஒருவராகிய சிறிதரன் ஒரு விஞ்ஞான சிறப்புப்பட்டதாரியாக இருந்தபோதும் சமூகசேவையே அரவது வாழ்க்கையாகக் கொண்டு அரும்பெரும் சேவை ஆற்றினார்.

திரு. சிறிதரன் அவர்களின் நினைவுகள் எம் மத்தியில் என்றென்றும் நிற்காது நிலைக்கும் அவரின் ஆத்மா இறைவனின் அடியில் அமைதி அடைய பிரார்த்திக்கிறேன்.

**தி. நாகேஸ்வரன்**
உதவி அத்தியட்சகர் (உள்ளூராட்சி)
வடக்குக்கிழக்கு மாகாணசபை உள்ளூராட்சி
திணைக்களம்,
திருகோணமலை.

# எமது உள்ளத்தில் குடி கொண்டிருக்கும்
# சிறீ

பெற்றோரின் தலைமகனாக, தனிமகனாக பிறந்து அன்னாரின் மகவாசையைத் தீர்த்த அருமைப்புதல்வன் சிறீ. பேரன் பேத்திக்கும் மூத்த மகளின் முதற்குழந்தையாகப் பிறந்து செல்லக் குழந்தையாக அவர்கள் மடியில் வளர்ந்து அவர்களின் ஆசை யைத் தீர்த்தவன் சிறீ. நண்பர்களுக்கு உற்றவிடத்துதவும் தோழன் சிறீ. தனது இனிமையான பேச்சினால் அயலவர்களைக் கவர்ந்து அவர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவன் சிறீ. தனது மனையாளின் இணைபிரியா ஆருயிர்த் துணைவன் சிறீ. தனது ஏக சகோதரியின் அன்பை என்றும் மறவாத அருமைச் சகோதரன் சிறீ. உரிய பராயத்தில் வெளிநாடு சென்று உயர்கல்வி கற்றுப் பட்டதாரியாகித் தன்னாட்டுக்கே சேவை செய்ய வேண்டுமென்ற உயர் எண்ணங்கொண்டு

மகன் தந்தைக் காற்றுமுதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்லென்னும் சொல்

என்ற வள்ளுவர் வாக்கை நினைவு செய்து தந்தைக்குப் புகழ் தேடிய தனயன் சிறீ.

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்

என்ற வாக்கிற்கிணங்க தாயை உவகைக் கடலில் ஆழ்த்திய சேய் சிறீ. அகதிகளின் இன்னல் துடைக்க அரும்பாடுபட்டவன் சிறீ. உயர் அதிகாரிட்குத் தன் செயற்றிறனை நிரூபித்தவன் சிறீ. சுருங்கக் கூறின் எல்லோருக்கும் மிக நல்லவன் சிறீ. அவருக்கு ஆண்டவன் கொடுத்த சேவை அவரின் பரந்த அன்புக்கும் பண்புக்கும் ஜீவகாருண்யத்துக்குமேற்ற சமூக நலன்புரி சேவையாளன்.

அன்னாரின் அகால மரணத்தின் போதும் மரணச் சடங்கின் போதும் வருகை தந்த பெருந்திரளான மக்கள் வெள்ளத்தில் கண்ணீர் வடிக்காதவர்களே இல்லையென்றால் இது ஒன்றே அவர் ஆற்றிய அன்பான சேவைகளையும் அவருக்கு மக்களிடையே இருந்த பெருமதிப்பையும் அளவிடப் போதுமானது.

இவர் வவுனியாவிலுள்ள சிதம்பரபுரம் அகதி முகாமுக்குப் பொறுப்பாக இருந்து சகலரும் மெச்சும்படி தன் கடமைகளை பாரபட்சம் எதுவும் காட்டாது நலிவுற்ற மக்களின் நலன்கருதி இரவு பகலாக உழைத்தவர். அவருடைய தொழிற்றிறமையும், நேர்மையும், அர்ப்பணிப்பும் வவுனியா செயலக உயர் அதிகாரிகட்கும் சக ஊழியர்களிடம் பெருமையைத் தேடித் தந்துள்ளது என்றால் மிகையாகாது.

அவரின் பேரிழப்பால் துயருற்றிருக்கும் அவருடைய மனைவிக்கும் பெற்றோருக்கும், சகோதரிக்கும் மற்றும் சுற்றத்தாருக்கும் ஆறுதல் அவன் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**திரு. கு. கிட்ணர் (இணை உதவி அரச அதிபர்)**
**திருமதி. கிட்ணர் (இளை ஆசிரி)**

ஸ்ரீ என்பவர் யாவராலும் நேசிக்கப்பட்ட ஒருவர் என்பது பெயரிலிருந்தே புலனாகின்றது. ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையின் இலட்சியம் ஒன்று உண்டு. இவருடைய வாழ்வில் அயராத உழைப்பு ஒன்றே இலட்சியம் என்று வளர்ந்தவர்.

இதற்கு சான்று பகரும் கூற்றாக யூ. என். எச். சீ. ஆர் அதிகாரி கிளியன்சிமித்தின் "நான் பல நாடுகளில் பணிபுரிந்துள்ளேன், ஆனால் ஸ்ரீயைப் போல் அயராது மனநிறைவுடன் உழைக்கும் அதிகாரி ஒருவரைச் சந்திக்கவில்லை" அமைந்துள்ளது என்பது கடமை ஒன்றே கண்ணாக, நேரம் தனது சுகம், தனது களியாட்டம் என்பவற்றை மறந்து உழைத்தவர் பாதி வழியிலே கடவுளால் அழைக்கப்பட்டு விட்டார்.

பைபிளில் கூறியபடி இவர் தேவனுக்குப் பிரீதியான வராகையால் விரைவில் அழைக்கப்பட்டுள்ளார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

என்னும் திருக்குறளுக்கு அமைய வாழ்ந்தபடியால் வானுலகிற்கு சென்றுள்ளார்.

ஒருவர் இவ்வுலகில் எப்படி வாழ்ந்தார் என்பது அவருடைய மறைவின்போது கூடிய கூட்டதின் மூலம் தெரியும் என்பது, இவரது மறைவின்போது கூடிய கூட்டம் எமக்குப் புலனாகின்றது. சமூக சேவை அதிகாரி என்னும் பெயருக்கேற்ப காலம் முழுவதும் தன்னை சேவைக்காகவே அர்ப்பணித்தார்.

அன்னாரது பிரிவு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமன்றி சகலருக்குமே பேரிழப்பாகும். அவரது ஆன்மா இறைவனோடு ஐக்கியப்பட இறைவனை வேண்டித் துயருறும் மனைவி, பெற்றோர், சகோதரி, மாமன் மாமி மற்றும் உறவினருக்கும் எனது அஞ்சலியைத் தெரிவிக்கிறேன்.

**அருணாசலம் சிவநாதன்**
சமாதான நீதவான் (J.P)

# நெஞ்சத்தைவிட்டு என்றும் நீங்காத பேரொளியே

கற்றுவந்த கவி - யுவ வருட மார்கழித் திங்கள்
உற்று வரும் அபர பட்ச பூரணைத் திதியில்
குற்றவனால் குறை வாழ்வு பெற்ற - சிறீதரன்
பற்றுதனை நீக்கி பரமன் அடி சேர்ந்தார்

கொஞ்சும் மொழி பேசி
குறு நகையில் வரவேற்று
தஞ்சம் என வந்தோர்க்கு
தான் நின்றே வழிவகுத்து
அஞ்சேல் என அபயமளித்து
ஆதரவும் காட்டி வந்து
கஞ்சி ஊற்றி காலமெல்லாம்
காத்துவரும் எம் தலைவா
பிஞ்சு மனம் கொண்ட
பிறர் மனம் நோகவிடா
குஞ்சுத் தாடி கொண்ட
கோமகனே எங்கு சென்றீர் ?
கொஞ்சமும் இரக்கமின்றி
கொடுரமான கொலை கண்டு
நெஞ்சு பொறுக்குதில்லை
நேர் மூச்சும் வருகுதில்லை
அஞ்சி நீர் சென்றதில்லை
அபலைகளையும் கை விட்டதில்லை
விஞ்சி அழுகின்றோம்
விதி செய்த விளையாட்டால்
ஆற்றுவார் ஆள் இன்றி
அகதிகளும் அழுகின்றனர்

போற்றி வந்த வன்னி நகரும்
　　பொலிவிழந்து போனதையா
எஞ்சி இருக்கும் எம்மவர்க்கு
　　என்ன வழி விட்டீர் ஐயா
மஞ்சத்தில் வாழ வைத்த
　　மனைவியின் வேதனையை
விஞ்சத்தில் நின்று தினம்
　　வேதனையுடன் பார்ப்பீரே
கொஞ்சிக் குலவி வந்த
　　கோமகனே குலவிளக்கே
நெஞ்சத்தை விட்டு என்றும்
　　நீங்காத பேரோளியே

ஆத்மா சாந்தியடைய நாம் பிரார்த்திக்கின்றோம்.

*செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்*
*செயற்கரிய செய்கலா தார்*

**சாந்தி சாந்தி சாந்தி**

சாயிராம்

**செ. சண்முகலிங்கம்**
10/8 A, 14th Lane,
Colombo - 13.

## மனிதங்கள் மரணிக்கப்படுவதற்கு முற்றுப்புள்ளி ஆகட்டும்

எம் மக்களின்
விடியலுக்கு உதவியதால்
உன்னைத் தொலைத்தவர்கள்
நாங்கள்

உன்னை மரணித்தது
என்னவோ பெரிய சாதனைதான்
எம்மவர்க்கு

ஆனால்
மனிதத்தை
மண்ணுக்குள் புதைத்து
கல்லறை கட்டவைத்ததுதான்
வேதனை

மனித நேயம்
இல்லாதோர் இருக்கும்வரை
மனிதத்திற்கு
இருப்பிடம்... ? கல்லறை.... ?

மனிதா
அற்ப சொற்ப ஆசைகட்காக
சத்திய மாய் அலையாதே
வாழவிடு - வாழு
சுதந்திரமாய்
வழி பிறக்கும்

சிறி.!......
உன் இறப்பின் பின்பும் ஒரு உதவி
உனது கல்லறை
மனிதங்கள் மரணிக்கப்படுவதற்கு
முற்றுப் புள்ளியாகட்டும் ●

**கண்ணீரில் உன் விம்பம் காணும்**
**அன்பு நண்பர்களின்**

# கண்ணீர் அஞ்சலி

# எம் சிந்தையில் மலர்ந்திடும்
# தியாகராசா சிறீதரனுக்கு
# சிந்தும் நினைவுகள்.

மன்றாடும் மனங்களில் மலர்ந்தவனே
மனங்கள் பலவர்ந்தவனே சிறீதரா நீ
மறைந்து மாதங்கள் பல மறைந்திடினும் - எம்
மனங்களில் மறையாது நிறைந்தவனே
உறைந்த உள்ளங்ககளோடு உலாவிவரும்
உன் நண்பர்களுடன் உலாவிவர
உதித்து வாராயோ,, நீ மீண்டும் இவ்வுலகில்
உதித்து வாராயோ

பசுமை நிறைந்த நினைவுகளுடன்
பாடித்திரிந்த அந்நாளை நினைக்கின்றோம்
பலர் வியக்கும் திறனுடனே பாடி ஆடி
அவனியில் பவனிவந்த அன்பனே நண்பனே சிறிதரா
பாவி எம்மை பாரினில் இரு என்று விட்டுப்
பறந்தோடிப் போனாயே.. சிறீ
கேவி அழும் எம் குரல் கேட்டுத்
தாவி நீ வாராயோ வந்தெமக்கொரு சேதி கூறாயோ

உன் அரிய நண்பர்கபட் கொன்றென்றால்
உளம் துடிக்க உறுதுணை புரிவாயே
உன் உயிரைப் பறித்தவர்களின்
உடல் சரியும் காலம் வெகுதூரமில்லை
எம்மவனே எம் நண்பா
என்றோ ஒரு நாள் உண்மை சுடர்விடும்
இம் மானிலத்தில் இதயமற்ற கொடியவர்கள்
இறக்கும் நாள் வெகு தூரமில்லை

வாட்டமுறும் மனதுடனே
வந்தும்மை அணுகிவிட்டால்
நாட்டமுடன் எம்மை வரவேற்று
நன்றி பலகூறி வாட்டமேதென வினவிநிற்பாய்
காட்டும் உன் கருணை அன்பாய்
களித்திருந்த நாம் - எம்
கூட்டுக்கிளி யொன்று கூட்டைவிட்டுப் பறந்ததுபோல்
வாட்டமுற்றோம் வா சிறிதரா வந்து
மீண்டும் எம்மோடு இணைந்துவிடு

இடுக்கண் பல களைந்து எம் இதயத்துள்
இணைந்தவனே எம் சிரிதரா - நீ
தொடுத்த சேவையதால் நிலமகள் மைந்தர்
நிறைவுடன் வாழ்ந்தனர்
மடுத்த சேதி நின் மடிவு என்பதால்
மலைத்தனர் மனம் சிதறித் துடித்தனர்
விடுத்தோம் கண்ணீர் விண்ணில் புகுந்தவனே
அடுத்த துயரோடு அலையும் உம்மவரைக் காணவா!

சமூகம் வாழவேண்டு மெனச்
சமூக சேவைதனைத் தந்தவனே - நீ வாழவைத்த
சமூகம் விடும் கண்ணீர் சங்கமித்து
சரிந்தொரு ஆறாய்ப் பாய்கிறதே பார்க்க வாராயோ
சமூகத்தை வாழவைத்த நின் உயிர் குடித்த
சஞ்சலன் இயமனை
சம்கரிக்கும் நாளென்றோ அன்றே
எம் சிறீ எம்முடன் வாழ்வான்

உயிரைக் குடித்தான் - அன்று
உயிர் காக்கும் இறைவன் காலால்
உதைபட்ட கூற்றுவனான்
உடலை மட்டும் பிரித்த அவனால்
உன் உள்ளத்தை எம்மிடமிருந்து பிரிக்க முடியவில்லையே
முடியாது பிரிக்க முடியாது - எங்கள்
உள்ளங்களில் உறைந்திட்ட உன்னை
எம்மிடமிருந்து எவரும் பிரிக்க முடியாது

**நண்பா**

நின் தந்சிதை அவர் எம் தந்தை
சிந்தும் கண்ணீர் எம் சிந்தையை சிதையவைக்கிறதே
நின் மனைவி எம் சோதரி அவள்
ஓ என அவறும் ஓசை எம்மை உடைக்கிறதே
நின்னவர்க்கு தேறுதல் கூற வெனச் செல்லுதல்
நின் நண்பர்களின் மனங்கள் வடிக்கும்
இரத்தக் கண்ணீர்காண இங்கு நீ வாராயோ எம்
இதயம் நிறைந்தவனே இங்கு நீ வாராயோ

மண்ணினில் பிறக்கும் எவ்வுயிரும்
மண்ணினில் மடிவது இயற்கை
மன்னவனே எம் மனங்கவர்ந்தவனே
எம்மவனே சிறீதரா
மண்ணதில் மக்களுக்காய் சேவை செய்த
நின் உயிர் பிரிந்தது
தென்னவன் பாதம் பணிந்து நின் ஆத்ம சாந்தி
வேண்டு நின்றோம் உன் உள்ளத்தில் உலாவிவரும் நண்பர்கள்
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டவர் மீள்வதில்லை மண்ணில் நியதி இது
வேண்டாம் நமக்கு அதுவே வழியென
மீண்டும் எம்மிடை சிறீ அவன் நினைவு உலாவிவர
வேண்டி நிற்போம் அவன் ஆத்ம சாந்ததிக்காய்
வேண்டி நிற்போம் அவன் ஆத்ம சாந்தி

**பிரிவினால் வாடினும் பிரிவே இல்லா உன்நினைவோடு வாழும்**
**உன் நண்பர்கள்.**

# கட்டாரிலிருந்து......

சிறியண்ணா

உங்களுக்கா அண்ணா இந்த நிலை ? என்னால் இன்னும்கூட நம்ப முடியவில்லையே. மற்றவர்களின் மனசறிந்து நோகாமல் நடப்பவர் நீங்கள். உங்களுக்கேன் அண்ணா இக்கதி நேர்ந்தது ?

இராப்பகல் பாராது சேவை செய்கிறாய் என்றல்லவா ஊரிலிருந்து செய்தி வந்தது. உங்களை இரக்கமின்றிக்கொல்வதற்கும் மனம் வந்ததா ?

எத்தகைய பிரச்சனைகளையும் புன்சிரிப்பால் நிதானமுடன் தீர்த்துவைப்பாயே ? எதனால் உனக்கு இக்கதி என்று இன்று வரை என்னை ஏங்கவைத்து விட்டதே ?

அண்ணா என்ற முறையில் எம் நட்பு இருக்கவில்லையே! உற்ற நண்பர் போலல்லவா நாம் பழகிவந்தோம்.

பாலகராய் நாம் இருக்கையில் தேரிழுத்துச் சாமி தூக்கி விளையாடியது முதல் யாழ் இந்துவிலும் ஏன் இந்தியாவிலும் என்னுடன் கல்வியில் தொடர்ந்தவரல்லவா நீங்கள்.

இல்லறத்தில் அடிவைத்து ஈராண்டு தானும் முடியவில்லையே உங்கள் பிறந்தநாளுக்கு , தொடர்ந்து வரும் உங்கள் இரண்டாம் ஆண்டு திருமண நிறைவு தினத்திற்கும் அனுப்பவென வாங்கி வைத்த வாழ்த்து மடல்கள் உங்கள் பிரிவுச் செய்தியதை உறுதிப்படுத்துகின்றனவே.

சிறீயண்ணா நீங்கள் மறையவில்லை. என் நெஞ்சில் மட்டுமல்ல எல்லோர் நெஞ்சங்களிலும் என்றென்றும் நீங்கள் நிலைத்திருப்பீர்கள் என்பது நிச்சயம்.

ஆறாத் துயருடன்
அன்புத்தம்பி
**காண்டீபன்.**

# கவிதாஞ்சலி

பூபாளம் கேட்டிடும் நேரத்தில்
முகாரி கேட்ட தம்மா
உழைக்கவே பிறந்த அண்ணன்
உள்ளத்தால் உயர்ந்த அண்ணன்
வாழவே பிறந்த அண்ணன்
சேவையில் நிமிர்ந்த அண்ணன்
திக்கற்ற அகதிகளின் கலங்கரை விளக்காயான
இவன் பாதியில் அணைந்தானம்மா

காலத்தின் ஊழிக் கூத்து
கடவுளின் பாவைக் கூத்து
ஏலத்தில் விலை யானாற் போல்
ஏதுமிலான் மடிந்த தேன் ?
மனிதம் தொலைந்து நாட்களாகி விட்டதோ
மகாத்மாக்கள் வாழ்வதுவும் மலையேறி விட்டதோ
ஈனர்களின் இரக்கமற்ற வேள்வித் தீக்கு
ஆகுதி யாக்கப் பட்டானம்மா

நல்லைக் குமரனும் வழங்க வேண்டும்
மருதவி நாயகனும் அளிக்க வேண்டும்
குல அம்மனும் நல்க வேண்டும்
ஆதி அந்தமிலா சட்ட நாதனும்
அன்பினால் நிறைந்த எம் அண்ணனுக்கு
அருள வேண்டும் ஆத்ம சாந்தி சாந்தி

தன் தீபத்தை அணையவிட்டுப் பல உள்ளங்களில்
தீபங்களை ஏற்றிவிட்ட அண்ணனுக்கு
இவ் வஞ்சலி சமர்ப்பணம்.

**தம்பி முகுந்தன்**

**அநியாயமாக எம் சிறியை இழந்து தினந்தோறும் அணுவணுவாகத் துடிக்கும் அவரின் குடும்ப அனாதைகளின் மனக்குமுறல்கள்**

# ஆருயிர் சிறியா

வெந்து நொந்து போன உடல் உணர்வுடன்
வீரம் களை கட்டி நிமிர்ந்த பார்வையுடன்
காளை போல் நின்ற தங்களின் அன்புருவை
என் சிந்தையில் நிறுத்தி அகக் கண்ணில்
உருவம் வழி சமைத்து வழிபடும் பாவியின்
வாழ்வில் எங்கு காண்பேன் நிம்மதி.

அன்றும் இன்றும் என்றும் எங்கள் சிறிதரன்
எங்கே ? அவன் நடந்து வந்த புனிதபாதை
எங்கே ? அவனின் அன்பு வழிப் பணிகள்
தான் எங்கே ?

அராஜக வாதிகளின் பிடியில் சிக்கிச் சீரழியும்
எம்சமு தாயத்தையும் சமூகச் சீர் செய்யும்
மெழுகு வர்த்திகளான மனித வளங்களை எண்ணிப்
பார்க்கும் தூய்மை உள்ளம் எங்கே ? துணிவு
எங்கே ? துயர் துடைக்கும் நேசக் கரமெங்கே ?
கொடுமை யிலும் கொடுமையையா

மனிதாபிமானம் குழிதோண்டிப் புதைக்கப் பட்டுவிட்டதா ?
புனிதபாதை சமைக்கும் புண்ணியவான் பாவிகளின்
கொடுரச் செயலினால் வன்னிமாதா மண்மீது
கறைபடிந்த உடலுடன் சாய்க்கப் பட்டசெய்தி
யாரைத்தான் உலுக்காமல் விட்டது ?
நெஞ்சு பொறுக்கு தில்லையே
பதியே சதியின் கொடுமையால் விதியை மாற்றி
விட்டனர். பார்புகழும் வேந்தை புழுதியில் வீழ்த்தி
விட்டனர். மனிதாபிமான முள்ள மக்கள் வாழும்
இந்நாட்டில் உயிரின் மதிப்பு கிலோ என்னவிலை
என்று கேட்குமளவிற்கு வன்னி மாதாவின் வாய்
கட்டப்பட்டு விட்டதா ?

எமது எதிர் காலம் எப்படி அமையும் என்று
எள்ளளவும் அறியாத நிலையில் பூத்துக் குலுங்கும் பொன்மலர்களாக
வாழ்வின் பாதையில் அடி எடுத்து வைத்து இரண்டு
ஆண்டுகள் முழுமை பெற வில்லையே ஐயா ?
குறைவில்லா வாழ்வு நாம் வாழ்வோம் என்றீரே
கட்டிய மாங்கல்யமும் கூறையும் இன்றும் அதே போன்று
பொலிவுடன் திகழ்ந்து கொண்டு இருக்கும் வேளையிலே

விடிவு வந்து பொழுது புலரும் முன்
கட்டிய திருமணக் கோலம் அழியு முன்
முடிவு ஒன்று வந்து விட்டது முடிவில்லா
முடிவாக முறை கெட்டுப் போன நிறையாக
சிறை பட்டு வந்து பறை அறிய
விட்டனரே பாவிகள் மறையவனின் வேதம் ஓதி
மணமேடை வலம் வந்து கட்டிய தாலியெங்கே
ஏன் பறித்தார்கள் பாவிகள் ?

பிறந்த புத்தாண்டு எமக்கு இப்படித்தான் பிறக்கும்
என்று கடவுள் கூட எழுதியிருக்க மாட்டான்
கொலை காரன் எழுதி விட்டான் ஐயா
புத்தாண்டு பிறந்த அன்று பற்பல கதைகள்
கூறி அறுசுவை யுடனே அமுதுண்ண பாயாசமும்
அனுப்பி விடு என்றுகூறி இனிமை யாகத்தானே
எதிர் பார்த்தீர்கள் புத்தாண்டு பிறந்து ஐந்து
நாட்களுக்குள் உயிரைப் பறித்து விட்டானே

உங்கள் உயிரைக் கொலை காரன் எடுத்தது
தெரியாமல் அடுத்தநாள் அந்நேரம் மார்கழிப் பிள்ளையாருக்கு
போடும் கோலம் பற்றியும் அப்பாவோடு மகிழ்வோடு
கொண்டாடும் பொங்கல் பற்றியும் கதைத்துக் கொண்டு
நீங்கள் வருவீர்கள் என்று இரவு இரவாக
வழிமேல் விழிவைத்து பசியோடு இருந்தேனே இறுதியில்
அயலவர் பொங்கள் கொண்டு வந்து தரும்
நிலைக்கு எங்களை ஆளாக்கி வஞ்சித்து விட்டானே
அந்தக் கொலைகாரன் ?
பூரண நிலா அதிகாலை புலர்ந்த வெள்ளி
மார்கழித் திருவாதிரை நாள் சிதம்பரபுர நிலைய
மக்களுக்கு உணவு முத்திரை பொங்கலுக் கிடையில்
வழங்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு

தானே கொலை காரன் நாள் குறித்ததுகூட
தெரியாமல் பௌர்ணமி விடுமுறை என்றும் பார்க்காமல்
போனீர்களே அன்றும் வழமை போலவே வழியனுப்பி
வைத்தேனே அதுதான் எமது கடைசிச் சந்திப்பு
காட்சியும் கூட அன்று மதியமும் சாப்பாடு
யார் தந்தது என்று கேட்டு வாங்கிச்
சாப்பிட் டீர்களாம் இதுதான் கடைசிச் சாப்பாடு
என்று கொலைகாரன் கேட்க வைத்து விட்டானே

அலர்ந்தது இரவு புலர்ந்தது பொழுது ஆனால்
நீங்கள் வர வில்லை வந்ததோ பேரிடிச்
செய்தி! என்ன கொடுமை என்ன காரணம் ?
வீதி வழி வந்த நீங்கள் பாதி
வழியில் வஞ்சித்துப் பறிக்கப் பட்டது உங்கள்
உயிர். கடந்த புரட்டாதி சனிக்கு சிதம்பரபுரம்
போகும் வழியில் உள்ள விஷ்ணு கோயிலில்
எள் எண்ணெய் எரித்து கை குவித்து
கும்பிட்ட உங்களை விஷ்ணு கூட அன்று
உங்களுக்கு நடந்த அகோரத்தை கண்டு சகிக்க
முடியாமல் நீதி தேவதைபோல் கண்களை இறுக
மூடிக் கொண்டு இருந்தாரோ ஐயா

பிறந்து வளர்ந்த யாழ் மண்ணை விட
பண்டார வன்னியன் பிறந்து வளர்ந்த வன்னியின்
மண் பாதுகாப்பு என்று தானே எம்
தமிழ் இனம் ஓடிக் கொண்டி ருக்கிறது
ஆனால் இங்கு உங்களுக்கு நடந்த தென்ன ?
நீதி கேட்க யாருண்டு ? அந்தோ பரிதாபம்
வட்டிலிலும் தொட்டிலிலும் மார் மேலும் தோள்
மேலும் கட்டி அணைத்த தந்தை தாய்
இருக்கத் தாரம் இருக்க தங்கை யிருக்க
தாய் மாமன்மார் பேரனும் இருக்க ஏகாந்தப்
பெரு வழியில் நடுநிசியில் யாருமே கேட்காத
அரவமே யில்லாத நடுநிசி ஓரிடத்தில் உங்கள்
உயிரைப்பறிக்க யார் கொடுத்தது உரிமை ?

பெற்ற அன்னைக்குக் கூட கிடையாத உரிமை
கொலை புரிந்தவனுக்கு யார் கொடுத்தது ?
சீராட்டி வளர்ந்து கற்பனைகளை நெஞ்சிற்குள் புதைத்து
வைத்திருந்தது வெட்டிச் சாய்க்கத்தானா ? கால மெல்லாம்

பக்கத் துணையாக இருப்பான் என நினைத்த
எம்மை அனாதை யாக்கி விட்டார்களே பாவிகள்

கொள்ளி வைக்கப் பிள்ளை யுண்டு கடமை
செய்வான் என நாம் கனவு காண
அதே கொள்ளியை தந்தையான நானே உமக்கும்
வைக்கும் கொடுர நிகழ்வைக் கண்டு துடியாத
மனமும் துடித்தது சிதம்பரபுர நிலையை த்திற்கும்
பிரதேச செயலகத் திற்கும் உமது இடத்தை
நிரப்ப யாரோ ஒருவர் வரலாம் எங்களுக்கு
எங்கள் ஆருயிர் இடத்தை நிரப்ப
இனி யார் வருவார் ? எல்லோருக்கும் ஓடியோடி
முகம் சுளியாமல் சேவை செய்தீர் இறுதியில்
அந்தச் சேவையாலேயே எம்மைப் பரிதவிக்க விட்டு
விட்டுச் சென்று விட்டாயே சிறியா

பலவிதமாய் வாழப் பலவழி இருக்கும் போது
வேலைக்குப் போக வேண்டிய கட்டாயமு மில்லாமல்
கௌரவமாக ஓர் வேலை பார்க்கட்டும் எனத்தானே
பிள்ளையை அனுப்பினோம்.
கடமை கடமையென கண்ணிய மாக
காருண் யத்துடன் கடமையில் கண்ணாய்
இருந்தது குற்றமா ? அதற்கு விலையாகவா
யாருமற்ற அனாதை போலச் சாலை யோரத்தில்
போடப் பட்டாயா சிறியா

என்ன பிழை செய்தான் எங்கள் சிறி ?
அரச அலுவலர் தமது கடமையைச் செய்வது
பிடிக்க வில்லை யென்றால் வேலையை விட்டுப்
போ என்று எச்சரிக்கை விடத் தெரியாதவனா நீ
எம் கண்ணீரைத் துடைக்க சிறி இனி
வருவானா ? சிறி நீ சொல் வருவாயா ?
எங்கள் சிறியின் உயிர் பிரிந்ததிலும்கேவலமாய்
கொலை செய்தவனின் உயிரும் பிரிவது நிச்சயம்
ஆலகால விடமுண்ட இறைவா கொலை காரனையும்
ஒருபோது கவனித்துக் கொள்ளப்பா.

எங்கள் கவலையை எப்படிக் கொட்டித் தீர்ப்பதென
எமக்கே தெரிய வில்லை ஐயா வயோதிப
வேளையில் பார்க்கவும் அந்திமக் கிரியைகள் செய்யவும்

ஆண்பிள்ளை இருக்கிறீர் என்றெண்ணி இலகு காத்த கிளியானோம்
கட்டிய மனைவி சிறகிழந்த பறவைபோல் துடிதுடிக்க
விட்டுச் சென்றீரோ
அன்புச் சோதரிக்குத் துணையாவீர் என்று நாம்
மனக் கோட்டை கட்டியது பாழாய்ப் போனதையா
எல்லா வற்றிற்கும் நான் இருக்கிறேன் என்றீரே
இன்றெமக்கு ஆறுதலுக்காக யார் இருக்கிறார்கள் ஐயா ?
கடவுள்தான் உரு எடுத்து வந்தாலும் எங்கள்
கவலைகள் தீருமா ஐயா ?
நீர்போன இடத்திற்கு எங்களை அழைத்துச் செல்லடா
எங்கள் செல்வ மகனே

**மனைவி,**
**பெற்றோர்,**

**தங்கை**

# அண்ணா சென்றவிடம் பகராயோ

அன்றொரு நாள் அண்ணா
அழகாக என் முகம் வருடி
வென்றிடுவேன் இவ்வுலகை வதனி
வேதனையை விட்டு விடு
நின்று நானே உன் வாழ்வை
நெறிப்படுத்தி வாழவைப்பேன்
என்று பகர்ந்த கதை
எல்லாமே போனதண்ணா

அண்ணா என்றழைக்க
ஆர் உண்டு இவ்வுலகில் ?
மின்னாமல் முழங்காமல்
மீளாவுலகம் போனதேனோ ?
கண்ணாய் இருந்த நீயும்
கானல் நீராய் போனீரே
என்ன கொடுமை செய்தேன்
எவரும் இன்றி வாழ்வதற்கு ?

கொஞ்சும் மொழிபேசி
குலவி வந்த அருமை அண்ணாவே
நெஞ்சு பொறுக்காமல் உன்னை
நெருடி விட்டனர் படுபாவிகள்
அஞ்சி என்றும் வாழாமல்
அகதி முகாம் நடத்தி வந்தீர்
மிஞ்சி விட்டிடாமல்
மேனியை கூறு போட்டனரே

காலம் வந்ததா அல்லது
காலன் தான் வந்தானா அண்ணா
கோலமாய் வாழ்ந்த அண்ணா
கேவலமாய் போனதேனோ ?
ஞாலம் போற்ற வாழ்ந்தீர் இன்று
ஞாலமே போனதண்ணா
பாலம் என்றிருந்த என்னை
பரிதவிக்க விட்டீரே
கொன்றவன் கொலைஞன் அன்றோ
கொடுமைகள் செய்தவன் அவனே
வென்றது அவனின் வீரமல்ல
வேருடன் அவனும் மாள்வான்
நின்று அது என்நேஞ்சுவரை
நெடுமூச்சு விடுவேன் அண்ணா
கன்றுடன் அவனும் தானே
கதறி வீழ்வது உண்மை

சிந்தையில் என்றும் வாழ்ந்தீர்
சிறப்புடன் நானும் வாழ்ந்தேன்
எந்தையிடம் இயம்பவில்லை
என் இனிய கனவுகளை
நிந்தனை நீர் இன்றி
நிமிர்ந்து நின்று வழிகாட்டி என்
சிந்தையில் உயர்ந்தவனே செம்மலே - அண்ணா
சென்றவிடம் பகராயோ

சாலை யோரத்தில் யாருமற்ற அனாதையாகக்
காலையில் கண்டோமே கண்றாவிக் காட்சியை
அனாதைகளின் பெரு நிதியே! உன்னையும்
அனாதை யாக்கி புழுதியிலே புரளவிட்ட
பாதகர் யார் அண்ணா ? கூறு அண்ணா
தெய்வமும் மறந்ததா ? நீதி தேவன் கூட
நித்திரை யாகி விட்டானா ?

**அன்புத் தங்கை**

I knew Mr. P. T. Sritharan as the Officer in Charge of the Sithamparapuran Welfare Centre in Vavuniya and learnt to respect hin as a very dedicated and knowledgeable Officer, who managed to fulfill his duties and responsibilities while remaining human and always friendly with the camp inhabitants and his colleagues.

He has been administering the Welfare Centre as Camp Officer and Social worker, being the most prestigious and well known facility for retunees from India in the North, housing more than 4000 returnees from India and has been tireless in his efforts to assist the reptriation ofmany more people returning to their homes. It is most sad and unfortunate to lose such a valuable person in most terrible and unpredicatable circumstances. We miss him at thiscritical time and he will be remembered fondly by all especially by the displaced and destitute people.

**Kilian Kleinschmidt**
Field Officer
UNHCR Vavuniya.

**හදිසි ගප්‍රනයට ලක් වූ මාගේ ආදර මිත්‍ර**
**ශ්‍රීදරත් මිතුර අප ඔබගාවයි**
**ඔබ අප ගාවයි නාමය මිතුරත් ගාවයි**

1. රටක් වටිනා මිතුරා ලේ විලක මැද හිටියා
වූ විපත අදහන්න බැරිව මිතුරු කැල මැලවී සිටියා
මේ විපතේන් මුලු නගරයම හැඹූ කඳුලින් වැලපි සිටියා
මෙවැන් අංකල් ගොදුරු ගනුනයට කිමද දේවියන්ද නෙබලා සිටියා

2. තවමත් සුදු කොඩි රුගෙන නිවහන ඉදියේ ඇත්තේ
නිවහන ආදුරු කල ඔබ අපට අහිමිබව පෙම් ඇත්තේ
නිවහනට ආලෝකය ගෙන දුන් ඔබේ කොට කලිසම නිවහනේ ඇත්තේ
කොට කලිසම දකිනකොට ඔබ මිතුරන් කැල ඒ පැත්තේ
අඩු කඳුලින් නේත් පිරි ඇත්තේ

3. ශ්‍රීදරත් අතුරු පහ මගේ සිතේ ඇත්තේ
ආදර මිතුරුකු මා හට අහිමි වි ඇත්තේ
මිතුරගේ ෆෝටෝ එක මාගාවයි ඇත්තේ
සිරුර දිරායඩි නාමය නොදිරයි මිතුර ලගයි ඇත්තේ

අප මිතුරු කැලට අහිමි වු ශ්‍රීදරත් මැතුද ?
ඔබට අමා මහා නිවන් සැප ලැබේවා

ඔබේ ආදර මිතුරු
ප්‍රියල් ජයසූරිය



'சிறி'யின் 'மரணம்' ஏற்படுத்திய தாக்கத்தில் வெளிவந்த
உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகைக் குறிப்புகள் சில....

# வவுனியாவில் அரச உத்தியோகத்தர் வெட்டிக்கொலை

அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் (உயர்ஸ்தானி கராலயத்தினால்) பராமரிக்கப்பட்டு வரும் வவுனியா சிதம்பரபுரம் நலன்புரிநிலைய பொறுப்பாளரும் சமூகசேவை உத்தியோகத்தருமான தியாகராசா ஸ்ரீதரன் இனந்தெரியாதவர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது சடலம் வவுனியா சிந்தாமணி பிள்ளையார் கோவிலுக்கு செல்லும் வெளிச்சுற்று வீதியில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் கிடக்கக் காணப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை காலை கடமைக்கென சென்ற இவர் அன்று மாலை வீடு திரும்பாததால் சனிக்கிழமை காலை அவரை தேடியவர்கள் சடலத்தைக் கண்டு பிடித்தனர்.

இவரது மர்ம மரணம் குறித்து அரச ஊழியர் அதிகாரிகள். மற்றும் பொதுமக்கள் மத்தியில் பீதி பரபரப்பு காணப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு சென்ற அரச அதிகாரிகள் முக்கியஸ்தர்கள் பொதுமக்கள் பலரும் கண்ணீர் விட்டு வேதனைப்பட்டனர். இந்த மர்ம மரணம் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அரச மற்றும் தொண்டர் நிறுவனங்களின் ஊழியர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கவேண்டும் என பலரும் பாதுகாப்பு பிரிவினரை கேட்டுள்ளனர்.

ஸ்ரீதரனின் பொறுப்பில் இருந்த சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் சுமார் நான்கு ஆயிரம் குடும்பங்கள் அகதிகளாக தங்கியுள்ளன. இந்நிலையம் யூ.என்.எச்.சி. ஆரினால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**சூரியன் - கனடா**
**07.01.1996**

## அதிரடி அய்யாத்துரை

வன்னியிலை அகதி முகாம் பொறுப்பாளர் போடப்பட்டதுக்கும் ரெண்டு எழுத்தாருக்கும் ஒரு சம்பந்தம் இல்லை என்பது பரவலானகதை. பலியானவர் நல்ல பொடியனாம் உண்மையாகவே பலர் கவலைப்பட்டுகண்ணீர் சிந்தினவை. மற்றுமொரு உரிமைகோரப்படாத கொலை. நல்லதுக்கு காலமில்லை.

வாரமலர்
தினமுரசு

The Sunday Times Sunday, January 14, 1996

# Tribute to Sritharan

Form our Vavuniya Correspondent

Thiagarajah Sritharan (36), an officer of the Social Services Department, who was stabbed to death by unknown persons recently drew high praise for his dedication to duty.

Mr. Klian Kleinschmidt, Field Officer of the UNCHR, Vavuniya, said Sritharan epitomised the true social service worker, who worked round the clock to ameliorate the conditions of nearly 4000 displaced returnees from India, oblivious to his personal needs.

The Project, REPPIA for Indian Returnees of the Ministry of Rehabilitation & Reconstruction, A. S. Selvaratnam, Which took place at Rambukulam cemetery before a large and representative gathering

The funeral oration was rendered by the Additional GA, Vavuniya, Ragunathapillai, on behalf of the GA, Vavuniya.

---

Even Vavuniya under the control of the Army is for from normal On January 6 the man incharge of the Sithamparapuram camp P. T. Sritharan was found dead with several stab wounds; his history cycle lay near by Sritharan was an amiable and helped official and his murder remains a myslery. The police have registered a case but the investigation has not gilded anything substantial.

**Frontline - February 9, 1996**

# வாழவே பிறந்தோம்
# மூக்கு முழியுமாய்
# வாழவே பிறந்தோம்

சிறியின் மரணம் எத்தகையது ? அகதிகளாகப் போய்விட்ட எமது மக்களின் வாழ்க்கையை மீள் நிர்மாணிப்பதற்கான பணியில் ஈடுபட்டு இருந்தவர் அவர். அகதி வாழ்வே நிரந்தரமாகி எமது சமுதாயம் சீர்ழிந்து விடக்கூடாது என்ற அந்தரங்க சுத்தியுடன் செயற்பட்டவர். யாருடனும் அதிர்ந்துபேசாது இன்முகத்துடன்.. மிக நெருக்கடியான காலகட்டத்தில் மிகக் கடினமான மனிதாபிமான பணிகள் மேற்கொண்டிருந்தவர்.

தான் சார்ந்த சமூகத்திற்காக நேரம் காலம் பாராது உழைக்கும் ஒரு மனிதன் சமுதாயத்தின் மிக அத்தியாவசிய பிரிவைச் சேர்ந்தவன். அப்படியானால் அவனைக் குருரத்தனமாக உடல் மீதி இன்றி அர்ப்பவர்கள் சமுதாயத்தில் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் ?

சமுதாயத்தில் இத்தகையோரின் அதிகரிப்பு எத்தகைய விளைவை உண்டாக்கும் ? எதனை மிஞ்ச வைக்கும்? சிந்திக்க வேண்டிய கேள்விகளே இவை.

சமுதாயத்தை பீதியின் நிழலில் வாழவைப்பது.

கொடுரமான சர்வாதிகார மனம் படைத்தவர்களின் பின்னால் பலி ஆடுகள் போல் நடக்க வைப்பது.தமது சுயநலம் நிறைந்த சிந்தனைகளுக்கு இசைவாக சமுதாயம் இருக்க வேண்டும் என இவர்கள் எதிர்பார்க்கிறார்கள் இத்தகைய ஒரு போக்கு கடந்த 16 வருடங்களில் வளர்ச்சி பெற்ற எய்ட்ஸ் போன்ற ஒரு கொடிய தொற்று வியாதியாக பரவி வருகிறது. இதனைத் தடுத்து நிறுத்துவதனாடல மக்கள் செயலில் இறங்கி ஆக வேண்டும். செயற்படாவிட்டால் இந்த நோய் முழுச் சமுதாயத்தையே விழுங்கி விடும்.

விராஜினிபாடிய எம். எச். எம். ஷம்ஸின் பிரபலமான தொலைக்காட்சி பாடல் ஒலிக்குத்போது சிறீயும் வவுனியா ரயில் நிலையத்தில் வந்திறங்கும் அகதிகளான மக்களுக்கு சேவை செய்துகொண்டு நிற்பார். ஆனால் சிறீயின் மரணம் அந்தப் பாடலின் முகத்தில் இரத்தத்தை பீச்சியடித்தது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

காட்டுமிராண்டித்தனத்தையும் கொலை வியாதி பிடித்தவர்களையும் சகித்துக் கொண்டுதான் இருக்கப்போகிறோம் என்றல-ா..

நாம் எல்லோரும் சவப்பெட்டிக்கடைகளை திறப்போம்.. புத்தம் புதிய வாடாத மலர்களைக் கொண்ட மலர் வளையங்களை முன்னரங்கில் அடுக்குவோம் வாழ்க மரணம் என்று உரக்கப் பாடுவோம்.

நாம் மனிதர்களே அல்ல காட்டு மிராண்டகள் என்று பிரகடினம் செய்வோம்.

சீ வெட்கம் கெட்ட வாழ்க்கை.. சாக்கடையில் நெளியும்புழுவிலும் கேடுகெட்ட வாழ்க்கை.

ஏய் சமுதாயமே எப்போது விழித்தெழுந்து நிற்கப் போகிறாய் ? நீ தொடர்ந்து மௌனமாக இருக்க முடியாது. உனது மானிட சிலிர்ப்பில் உண்மை பிரசவமாகும் அப்போது படுகொலை செய்யப்பட்ட சிறீ. அவரைப் போன்ற நல்ல மனிதர்கள் புதைகுழிகளிலிருந்து மக்களின் தோள்களில் சுமந்து வரப்படுவார்கள்.

படுகொலை செய்யப்பட்ட சிறீயின் குடும்பத்தினதும் அவர் நேசித்த அகதிகளான எம் மக்களினதும் துயரில் இணைகிறோம்.

**புதிய கண்ணோட்டம்**
**01.02.1996**

# වෙන්පුරාවෙ පරවියෝ ඇයි තාම නාවෙ

## ඒ මිනිසා මරා දැමුණ මරුවා කවුරු ද ?

**වව්නියාවේ භීෂණය ඒ ගැන කවරකුවත් කිසිවක් නො කරති. මරා දැමෙන හැම මිනිසකු ම ගැහැණියකු ම එක්කෝ කොටියෙකි. නැතහොත් කොටින් විසින් මරනු ලැබූවෙකි ඒත් මේ මිනිසා වෙන්පුරාවේ දී ඔබ දකින ඒ මිනිසා මරා දමන ලද්දේ**

එක් වරම කෙනකුගේ වැඩි අවධානයට ලක් නො වනු ඇත. අනාථ වූවෝ තම හැඳුනුම් පත් ඒ මිනිසාට ඉදිරිපත් කරති. එවිට ඔහු කඩිසර ව ඒ සියලු දේ පිරික්සා බලමින් අනථයන් අතරේ හිදී.

ඔහු වනාහී වව්නියාව කච්චේරියේ සමාජ සේවා නිලධාරියෙකු ලෙස සේවය කලතිස් හය හැවිරිදි ශ්‍රී ධරන් ය.

ඔහු උපත ලැබුවේ යාපනයේ නල්ලූර් පෙදෙසේ කල්ලියන්කාඩු ගමේ වුව ද. ජීවිතය වැඩියෙන් ම බැඳී තිබුණේ වව්නියාවටය. විවාහවී ජීවිතය ගෙන ගියෙ වව්නියාවේ ය.

ගෙදර දොර. දරුවන්. හා බිරිඳ හැරුණු විට ඔහුගේ ජීවිතය වැඩියෙන් ම ගත වුණේ අනාථ වූ මිනිසුන් අතර ය.

වෘත්තියෙන් ඔහු සමාජ සේවා නිලධාරියකු වුව ද. අනාථයන් අතර ඔහු කළ වැඩකොටස ඒ වෘත්තීය මට්ටමට පමණක් සීමා නො විය එය ඔහුගේ ජීවිතය ම විය.

පසු ගිය මාස අට තුළ ඔහු සේවය කෙළේ වව්නියවේ පිහිටා තිබෙන විශාල ම අනාථ කඳවුර වන සිදම්බරපුරම් අනාථ කඳවුරේ ස්ථාන භාර නිලධාරියා ලෙසිනි.

තම කඳවුරේ සේවා කටයුතු අවසන් කරන ඔහු සමහර විට ගෙදර වෙනුවට නැවත යන්නේ තවත් අනාථ කඳවුරකට ය. ඒවායේ අනාථයන් පිළිබඳව විස්තර විමසා අවශ්‍ය පරිදි ඔවුන් වෙනුවෙන් ද සේවය කරයි. වැඩකිරීමේ දී ඔහුට වෙලාවක් තිබුණේ නැත.

අනාථයනට රජයෙන් ලැබියයුතු සහනාධාර ලැබීමේ දී නොයෙක් අතපසු වීම් සිදු වේ. එහි දී ඔහු වහා මැදිහත්ව ගැටිය යුතු අය සමග ගැටෙමින් අතපසු එසේ ගැටීමට සිදු නො වුණා නො වේ.

ශ්‍රී ධරන් වැඩකළ සිදම්බරපුරම් අනාථ කඳවුර පිහිටා ඇත්තේ වව්නියාවේ සිට හොරොව්පතාන මාර්ගයේ කිලෝ මීටර් 18 ක් දුරිනි.

නව වසරේ පළමු වන පෝදා සවස 6.30 ට වැඩ ඇරුණු ශ්‍රී ධරන් යතුරු පැදියේ නැග ගෙදර ඒමට පිටත් වූණේය. එපමණකි!

පසු දා උදෑසන වව්නියාවේ ඉනර් සර්කියුලර් පාර සමග අවුට් සර්කිය ලර් පාර සමග ස්ථානයේ ශ්‍රී ධරන්ගේ මළ සිරුර සහ යතුරු පැදිය වැටී තිබෙණු දක්නා ලදී.

පොර බැදීමක ලකුණු ඔහුගේ සිරුරේ සටහන් ව තිබිණි වෛද්‍ය වාර්තාවෙන් හෙළි වුණේ වම් ඉළ ඇට පෙදෙසට වැදුණු පිහි පහර කිහිපය මේ මරණයට හේතු වී ඇති බවයි ගෙල කපා ඇත්තේ මරණයෙන් පසු මළ කඳ මෙතැනට ගෙන දැමීමෙන් අනතුරු ව බව පැහැදිලි විය. දවසේ උදෑසන ආහාරයෙන් පසු කුසට අහරක් ලැබී නො තිබිණි.

එල්ටීටීඊ පාලනයෙන් බැහැර ව ඇති උතුරු නැගෙනහිර ප්‍රධාන නගර කිහිපය අතරින් යම් තරමකට හෝ සාමාන්‍ය තත්ත්වයෙන් පවතින එක ම නගරය වව්නියාව යැයි සඳහන් කිරීම අතිශයෝක්තියක් නො වේ.

එවැනි නගරයක මෙවැනි අභිරහස් මරණයක් සිදු වීම ඒ සමාජය දරා ගන්නේ කෙසේ ද ? තත්ත්වය වඩා බරපතල වන්නේ ඔහු කිසිම දේශපාලන පක්ෂය කට සම්බන්ධ නැති කෙනකු වීමෙනි. ඔහු ඉතා අවංකව. වව්නියාවේ සාමාන්‍ය දෙමළ මිනිසුන් ඒ ප්‍රශ්නය අසන්නේ මෙසේය.

වව්නියාවෙන් උතුරට තියෙන්නෙ එල්ටීටීඊ තුවක්තු විතරයි. ඒත් දැන් මෙහෙ තුවක්කු කීයක් ද ?

හමුදාව. පොලිසිය. ටෙලෝ. ප්ලොට් යන මේ සියල්ලෝ වව්නියාවේ අවි දරා සිටිති.

මරන්නේ කවුරු ද ? හෙට මැරෙන්නේ කවුරු ද ? දන්නා කෙනෙක් නැත.

පසු ගිය අවුරුද්ද ඇතුළත පමණක් මෙවැනි අභිරහස් මරණ අටක් සිදු වී ඇත. ඉන් එක් අයකු මෙයින් අවුරුදු හතරකට පෙර එල්ටීටීඊ සංවිධානය හැර දමා පැමිණ හමුදාවට භාර වූ තරුණයෙකි.

ඔහු මරා තිබුණේ ද ශ්‍රී ධරන් සේ ම කපා කොටා ය. අනතුරු ව මළ සිරුර වව්නියාවේ වෛරවපුලියන් කුළම් ළමා උද්‍යානය ඉදිරිපිටට ගෙනැවිත් දමා මළ සිරුරේ ගෙල කපා ඇත.

ඉතින් මේ සමාජය මේ අභිරහස් මරණ හමුවේ නිදහස් දිවියක් ගත කරන්නේ කොහොම ද ?

වව්නියාවේ සාමාන්‍ය ජනයා මෙන් ම රජයේ ඉහළ නිලධාරීන් ද අද මුහුණ දී ඇති ප්‍රශ්නය එයයි.

මේ කිසිත් නො දන්නා අපි තවමත් රූපවාහිනියෙන් වෙන්පුරාවේ ගීතය අසමු.

අනාථවූවෝ හිස් දෑසින් හිස් අහස දෙස බලාගෙන හිඳිති. පරෙවියෝ ඇය තාම නාවේ......

මිනිසුනි. කවුරු දෝ ඔහු මරා මහ මග හෙළා ඇත. යළි ඔහු නො එනු ඇත.

1996 ජනවාරි 14 ඉරිදා
යුක්තිය

# வெண்புறாவே நீ இன்னும் ஏன் வரவில்லை ?

இந்த மனிதனைக் கொன்று விட்டார்கள் யார் அந்தக் கொலைகாரர் ?

வவுனியாவில் பதட்டம் இதையிட்டு யாரும் செயற்படவில்லை. இறந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் புலிகளா ? அல்லது புலிகளால் கொலை செய்யப்படுகிறார்களா ?

ஆம் வெண்புறாவில் நீங்கள் காணும் இம்மனிதர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அவலங்களால் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் தமது அடையாள அட்டையை இவரது கையில் ஒப்படைத்த மறுகணமே அவர்களது பிரச்சனைகள் அவரால் தீர்க்கப்பட்டுவிடும்.

வவுனியாக் கச்சேரியில் சமூகசேவை உத்தியோகத்தராய்ப் பணிபுரிந்த 36 வயது சிறிதரன். இவர் பிறந்தது யாழ்ப்பாணத்து நல்லூர் பிரதேசத்திலுள்ள கல்வியங்காடு கிராமத்தில் என்றாலும் அவர் வாழ்க்கையின் கூடுதலான காலத்தைக் கழித்தது வவுனியாவில். திருமணமாகி வாழ்க்கை நடத்தியது வவுனியாவில். வீட்டிலிருப்பதைவிடக் கூடுதலான நேரத்தை அகதி முகாம்களில் சேவைசெய்வதிலேயே கழித்தவர். சமூகசேவை அதிகாரியாக இருந்த போதிலும் தனது கூடுதலான பணியை நேரத்தை அகதி முகாம்களிலே கழித்திருக்கிறார். கடந்த எட்டு மாதங்களாகச் சேவை செய்தது வவுனியா சிதம்பரபுரத்தில் அமைந்துள்ள நலன்புரி நிலையத்தில் இல்லப் பொறுப்பாளராகப் பணி புரிந்துள்ளார்.

இந்த முகாமில் வேலைகள் முடிந்தவுடன் வீடு செல்லாமல் பிறிதொரு முகாமிற்குச் சென்றவர். அங்கும் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்தவர். காலநேரம் பற்றிச் சிந்திக்காது இரவு பகல் பாராது சேவை செய்தவர். அரசாங்கத்தின் நிவாரணப் பொருட்கள் கிடைப்பதற்குப் பிந்தினால் அல்லது சரிவரக் கிடைக்காவிட்டால் அதற்குரிய பொறுப்பாளர்களிடம் அணுகி வாதிட்டு என்றாலும் அவற்றைப் பெற்றுக் கொடுப்பார்.

சிறிதரன் பணிபுரிந்த சிதம்பர நலன்புரி நிலையம் அமைந்திருப்பது வவுனியாவிலிருந்து கொரவப் பொத்தானை வழியில் 18 K. M. தூரத்தில் ஆகும். புதிய ஆண்டின் முதலாம் போயா தினத்தன்று மாலை 6.30 மணிக்குத் தனது பணியை முடித்துவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடுநோக்கிச் சென்றவர் தான். மறுநாள் காலையில் உள்ளகச் சுற்று வீதியும் வெளிச் சுற்று வீதியும் சந்திக்கும் இடத்தில் சிறியுடைய உயிரற்ற உடலும் மோட்டார் சைக்கிளும் விழுந்து கிடக்கக் காணப்பட்டது. இவருடைய நெடிய உடலைப் பார்க்கும்போது யாருடனோ சண்டையிட்ட அடையாளங்கள் உடலில் காணப்பட்டன. ஆனால் மருத்துவ அறிக்கையின்படி இடது பக்க நெஞ்சுக்கூடு கத்தியால் குத்தப்பட்டதாகவும் இறந்தபின் அவ்விடத்திற்குக் கொண்டுவரப்பட்டுக் கழுத்து வெட்டப்பட்டுள்ளதாயும் கூறப்படுகிறது. அன்றைய தினம் சிறி எவ்வித உணவும் உட்கொண்டதாகத் தெரியவில்லை என மேலும் தெரிவிக்கின்றது.

வடக்கு கிழக்குக் பிரதேசங்கள் LTTE ன் கட்டுப் பாட்டிலிருக்கின்ற போதிலும் வவுனியாப் பிரதேசம் LTTE ன் கட்டுப்பாட்டிலில்லை என்று கூறுவதில் எவ்வித பிழையுமில்லை. அப்படிப்பட்ட நகரத்தில் இப்படியான கொலையைச் சமூகம் ஏற்றுக் கொள்ளவது எப்படி ? இப்படிப்பட்ட இடத்தில் எவ்விதமான கட்சிச் சார்புமற்ற இவர் இப்படி மோசமான நிலையில் கொலை செய்யப்பட்டது மிகவும் புதுமையான விடயம். இவர் மிகவும் நேர்மையானவரும் கூட.

வவுனியா சாதாரண தமிழ் மக்கள் கேட்கும் கேள்வி இப்படி வவுனியாவிற்கு அப்பால் தான் (யாழ்) LTTE இடம் துப்பாக்கியிருக்கின்றது ஆனாலும் இப்போது இங்கு எத்தனை துப்பாக்கிகள் இருக்கின்றன.?

இராணுவம், பொலிஸ், ரெலோ, புளொட் போன்ற இவர்கள் வவுனியாவில் ஆயுதம் தாங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். கொலை செய்தவர் யார் ? நாளை இறக்கப்போவது யார் ? யாருக்கும் தெரியாது. சென்ற வருடத்தில் மாத்திரம் இப்படிப்பட்ட கொலைகள் எட்டு நடந்துள்ளன. அதில் ஒருவர் நான்கு வருடங்கட்கு முன்பாக LTTE இடமிருந்து விலகி இராணுவத்திடம் சரணடைந்திருந்தார். அவர் கொல்லப்பட்டதும் சிறிதரன் போலவே. பின்பு உடலை வவுனியாவிலுள்ள வைரவப் புளியங்குள சிறுவர் பூங்காவிற்கு முன்பாகக் கொண்டுவந்து கழுத்து வெட்டப்பட்டது. இப்படியே போனால் சுதந்திரமாக வாழ்க்கை நடத்துவது எப்படி?

வவுனியாவில் சாதாரண மக்கள் முதல் அரச ஊழியர்கள், அதிகாரிகள் இன்று முகங்கொடுத்திருக்கும் பிரச்சனை இதுவாகும். இவை ஒன்றையும் அறியாத நாமெல்லாம் இலங்கைத் தொலைக்காட்சியான ரூபவாஹினியில் வெண்புறாவே பாடலைக் கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.

அகதியானோர் வெறுங்கையுடன் வெறுமனே ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வெண்புறாவே நீ ஏன் இன்னும் வரவில்லை?

மனிதர்களே யார் இவரைச் கொலை செய்தது ?
அவர் மீண்டும் வரப்போவதில்லை.

**14 . 01 . 94 யுக்திய பத்திரிகையில் வெளிவந்த**
**சிங்கள மொழி மூலக் கட்டுரையின் நேரடி மொழிபெயர்ப்பு.**

# இலங்கையில் அகதிமுகாம் தமிழ் அதிகாரி படுகொலை

(கொழும்பு ஜன 7) இலங்கையின் வடக்கு மாகாணமான வவுனியாவில் சிதம்பரபுரம் என்ற இடத்தில் தமிழ் அகதி முகாம் உள்ளது. ஸ்ரீதரன் என்பவர் இந்த அகதி முகாமின் பொறுப்பு அதிகாரியாக இருந்தார். நேற்று (சனிக்கிழமை) ஸ்ரீதரன் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார். ஏராளமான கத்தி குத்து காயங்களுடன் அவரது உடல் வவுனியாவில் உள்ள ஒரு வீதியில் கிடந்தது. இவரது யார்கொலை செய்தார்கள் என்பது தெரியவில்லை.

இதற்கிடையே இலங்கை கிழக்கு மாகாணமான மட்டக்களப்பில் ஏராவூர் என்ற இடத்தில் டெலோ இயக்கத்தைசேர்ந்த ஒருவரை நேற்று புலிகள் கட்டுக்கொன்றார்கள

மேற்கண்ட தகவலை இலங்கை ராணுவம் தெரிவித்துள்ளது

**தினகரன் இந்தியா**

# இலங்கையில் அகதி முகாம் அதிகாரி கொலை

(கொழும்பு வடக்கு இலங்கையில் தமிழ் அகதி முகாம் ஒன்றுக்குப் பொறுப்பு வகித்த மூத்த அதிகாரி தி. சிறிதரன் கத்தியால் குத்தி கொல்லப்பட்டார். இதனால் அந்த வட்டாரத்தில் பாதுகாப்புக் கவலை ஏற்பட்டுள்ளது என்று பொலிஸ் கூறியது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் பகுதிகளிலிருந்து அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்லும் நூற்றுக்கணக்கான தமிழர்கள் தங்கும் ஒரு முகாமின் பராமரிப்புக்கு அவர் பொறுப்பாக இருந்தார்

**ஏஎப்பி - சிங்கப்பூர்**

# வவுனியாவில் அகதிகள் நிலையத்தின் பொறுப்பாளர்
# கழுத்து வெட்டப்பட்டு கொலை

அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் (உயர் ஸ்தானிகராலயத்தினால் (யூ. என். எச். சி. ஆர்) பராமரிக்கப்பட்டு வரும் வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி நிலைய பொறுப்பாளரும் சமூகசேவை உத்தியோகத்தருமான தியாகராசா ஸ்ரீதரன் (36 வயது) இனந்தெரியாதவர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது சடலம் வவுனியா சிந்தாமணி பிள்ளையார் கோவிலுக்கு செல்லும் வெளிச்சுற்று வீதியில் கழுத்து வெட்டப்பட்டநில்யில் கிடக்கக் காணப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை கடமைக்கென சென்ற இவர் அன்று மாலை வீடு திரும்பாததால் நேற்று சனிக்கிழமை காலை அவரை தேடியவர்கள் சடலத்தைக் கண்டு பிடித்தனர்.

இரவது மர்ம மரணம் குறித்து அரச ஊழியர் அதிகாரிகள், மற்றும் பொதுமக்கள் மத்தியில் பீதி பரபரப்பு காணப்படுகிறது.

சம்பவ இடத்திற சென்ற அரச அதிகாரிகள் முக்கியஸ்தர்கள் பொதுமக்கள் பலரும் கண்ணீர்விட்டு வேதனைப்பட்டனர். இந்த மர்ம மரணம் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அரச மற்றும் தொண்டர் நிறுவனங்களின் ஊழியர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என பலரும் பாதுகாப்புபிரிவினரை கேட்டுள்ளனர்.

ஸ்ரீதரனின் பொறுப்பில் இருந்த சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் சுமார் 4 ஆயிரம் குடுத்பங்கள் அகதிகளாக தங்கியுள்ளன. இந்நிலையம் யூ. என். எச். சி. ஆரினால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

VIRAKESARI
**வீரகேசரி**

**07.01.1996**

# சிறிதரனின் கொலையின் பின்னணியில் இருந்தோரை அம்பலப்படுத்த வேண்டும்

## புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். கோரிக்கை

வவுனியா, வெள்ளக்கிழமை இவவு இனந்தெரியாதவர்களினால் குத்திக்கொல்லப்பட்ட வவுனியா செயலகத்தின் சமூகசேவை உத்தியோகத்தர் தி. சிறிதரனின் படுகொலையை வன்மையாகக் கண்டிப்பதாக ஜனநாயக மக்கள் விடுதலை முன்னனியின் வன்னி எம். பி. எஸ். சண்முகநாதன் தெரிவித்தார்.

நேரகாலம் பாராமல் இடம் பெயர்ந்து இந்தியாவுக்குச்சென்று தாயகம் திரும்பிய மக்களுக்கு கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் இவர் சிறந்த சேவையாற்றியவர். அரச ஊழியராக இருந்தபோதிலும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தன்னலமற்றவகையில் பணியாற்றியவர்.

அண்மைக்காலமாக வவுனியாவில் இடம்பெற்று வருகின்ற மர்மக் கொலைகள் வரிசையில் சிறிதரனும் பலியாகியுள்ளார். எமது கட்சியின் ஒரு பிரிவாகிய நங்கூரம் விளையாட்டுக்கழகத்தின் தீவிர ஆதரவாளராக இருந்து இப்பிரதேசத்தின் விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதற்கு முன்னின்று உழைத்தார். இரவது இழப்பினால் துயருறுகின்ற பெற்றார், மனைவி மற்றும் உறவினர்களின் துயரத்தில் நாமும் பங்கேற்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஈ. பி. ஆர். எல். எப். கண்டனம்

அகதிகளாகிய அல்லலுறும் மக்களுக்கு இன்முகத்தோடும் சுறுசுறுப்புடனும் அர்ப்பண உணர்வோடு சேவையாற்றிய சமூக சேவை உத்தியோகத்தராகிய சிறிதரனின் கொலையை மிலேச்சத்தனமான படுகொலையென ஈ. பி. ஆர். எல். எப். வின் வன்னிப் பிராந்தியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

ஈ. பி. ஆர். எல். எப். விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

அரச ஊழியராக இருந்தபோதிலும் தனது கடமை நேர வரையறைகளுக்கு அப்பால், சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த மக்களுத் தாயும் தந்தையுமாக விளங்கிச் சேவையாற்றினார். சிறந்த பண்பும் மனித நேயமும் உள்ள மனிதர்கள் இந்த நாட்டில் உயிர்வாழ்வதென்பது மிகவும் கடனமான ஒருவிடயமாகி விட்டதையே அவரது படுகொலை காட்டுகின்றது. சிறிதரனின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. இப்படுகொலையைச் செய்தவர்கள் உலகத்திற்குத் தோலுரித்துக் காட்டப்பட வேண்டும்.

அன்னாரின் மறைவுக்கு ஈ. பி. ஆர். எல். எப். தனது ஆழ்ந்த அனுதாபத்தை அவரது குடும்பத்தினருக்கும் அவர் நேசித்த மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றது.

**09.01.96** VIRAKESARI வீரகேசரி

## ஈ.பி.டி.பி. தூதுக்குழு
## வவுனியா விஜயம்

### முகாம் சென்று மக்கள் குறைகேட்டறிந்தனர்

ஈ. பி.டி.பி. தூதுக்குழு ஒன்று யாழ். மா. வட்ட எம். பி. எஸ். தங்கவேல் தலைமையில் வவுனியா சென்று வடபகுதி பயணிகள் தங்கும் முகாம்களுக்கு விஜயம் செய்து மக்களின் குறைகளை கேட்டறிந்தது.

பயண பாஸ் வழங்கும் விடயத்தில் இப்பொழுது சற்று துரிதம் காண்பிக்கப்படுவதாக தெரிவித்த பயணிகள், முகாமில் தண்ணீர் வசதிகள் குறைவாக இருப்பதாயும் தெரிவித்து பவுஸர்மூலம் தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

முகாமில் தங்குவோர் இப்பொழுது 2 மணி நேரம் வெளியே செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். இதனை ஐந்து மணி நேரமாக அதிகரிக்க வேண்டுமென்றும் அவர்கள் கோரினர்.

கொழும்பில் அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா தலைமையில் நடைபெறும் வடபகுதி புனர்வாழ்வு தொடர்பான செயலணிக் கூட்டத்தில் இது பற்றி எடுத்துக்கூறி நடவடிக்கை எடுப்பதாக தங்கவேலு எம். பி. அங்கு உறுதியளித்தார்.

பல்பலைக்கழகத்துக்கு தெரிவான பல மாணவர்கள் முகாமில் தங்கியிருக்கின்றனர். இவர்களையும் சந்தித்து தூதுக்குழு பேசியது.

தங்களை தாமதமின்றி கொழும்பு செல்வதற்கு அனுமதிபெற்றுத் தருமாறு அவர்கள் கேட்டுக்கொணடனர். இதற்கான ஏற்பாடுகளையும் மேலிடத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக தூதுக்குழுவினர் தெரித்தனர்.

தங்கவேலு எம். பி. யுடன் கிளிநொச்சி அரசாங்க அதிபர் தில்லைநடராசாவும் முகாமுக்கு சென்றிருந்தார்.

தங்கவேல் எம்.பி.பின்னர் அகாலமரணம் அடைந்த யூ.என்.எச்.ஆர். பராமரிப்பு முகாம் அதிகாரி எஸ். சிறிதரனின் பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும் அவரது இல்லத்துக்கு சென்று மலர் அஞ்சலி செலுத்தினார். குடும்பத்தினருக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

VIRAKESARI
வீரகேசரி
12.01.96

# வவுனியா மர்ம கொலைகள் பற்றி விசாரணை தேவை

(வவுனியா,) வவுனியாவில் அண்மைக்காலத்லில் இடம்பெற்றுள்ள புதிய பாணியிலான மர்மக் கொலைகள் தொடர்பாக பொலீஸாரும் படையினரும் இணைந்து தீவிர விசாரணை நடத்தி இச்சம்பவங்களுடன் தொடர்புள்ளோரை கண்டுபிடித்து சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும் என்று டெலோ அமைப்பின் வவுனியா மாவட்ட செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளது

இது தொடர்பாக டெலோ செயலகம் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வட-கிழக்கு மாவட்டங்களில் வவுனியா பிரதேசத்தில் மட்டுமே இயல்பு வாழ்க்கை சீராக உள்ளது. வவுனியா மக்கள் எச்சந்தர்ப்பத்திலும் அமைதியைக் கெடுத்துவிடும் நிலைமை ஏற்படக்கூடாது. மனித நேயத்தின் பேரால் இத்தகைய கொலைகளை கண்டிக்க எவரும் தயங்கக்கூடாது.

இப்படியான கொலைகள் மூலம் வவுனியா பிரதேசத்தில் பீதியான சூழ்நிலையை ஏற்படுத்த சில சக்திகள் முயற்சிப்பதாகத் தெரிகிறது. கொலைகளுக்கான காரணத்தையும் கொலையாளிகளையும் கண்டுபிடிக்காத வரை பொதுமக்களின் மனதில் உருவாகியுள்ள சந்தேகங்களையும் பீதியையுத் போக்க முடியாது.

இக்கொலைகள் தொடர்பான விசாரணைகளுக்கு உதவ இப்பகுதி மக்கள் பின்னிற்கக் கூடாது. அவ்வாறு பின்னின்றால் இத்தகைய கொலைகள் சாதாரண அப்பாவி மக்களையே நெருங்கிவிடும்.

VIRAKESARI
வீரகேசரி
12.01.96



# சிறிதரன் போன்ற சேவையாளரை எந்த நாட்டிலும் காணவில்லை

## யூ.என்.எச்.சி.ஆர் அதிகாரி இரங்கலுரை

(வவுனியா) உலகில் நான் சேவையாற்றிய எந்த நாட்டிலுமே சந்தித்திராத ஒரு சிறந்த சமூகசேவையாளனாக சிறீதரன் விளங்கினார். தனக்கென ஒரு குடும்பம் உள்ளது என்பதைக்கூட சிலவேளைகளில் மறந்து அர்ப்பணிப்போடு பணியாற்றிய உத்தியோகத்தரை நாம் இழந்துவிட்டோம். அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது என்று வியாழக்கிழமை பிற்பகல் சமூக சேவை உத்தியோகத்தராகிய தியாகராஜா சிறிதரனின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு இரங்கல் உரை நிகழ்த்திய ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் (யூ. என். எச். சி. ஆர்) வவுனியா பிரதேச வெளிக்கள உத்தியோகத்தர் கிளியன் ஸ்மித் தெரிவித்தார்.

கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு வவுனியா வெளிவட்ட வீதியில் கத்தியால் குத்தப்பட்டு கழுத்து வெட்டப்பட்ட நிலையில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு கிடந்த, சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தின் பொறுப்பாளராகிய சிறிதரனின் இறுதிக்கிரியைகள் வைரவப்புளியங்குளத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது..

அரச அதிகாரிகள், ஊழியர்கள், நகரசபை உறுப்பினர்கள், கட்சிகளின் பிரமுகர்கள், தொண்டர்நிறுவனங்களின் ஊழியர்கள் சிதம்பரபுரம் நலன்புரி நிலைய மக்கள் என பலதரத்தவரும் பெருமளவில் இதில் கலந்து கொண்டார்கள்.

இரங்கல் உரை வைபவத்திற்கு புனர்வாழ்வு புனர் நிருமாண அமைச்சின் ரேப்பியா நிறுவனத்தைச் சேர்ந்த தாயகம் திரும்பிய இடம் பெயர்ந்த மக்களுக்கான திட்ட அதிகாரி ஏ. எஸ். செல்வரட்ணம் தலைமை தாங்கினார்.

சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தின் பராமரிப்பு செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான கிளியன் ஸ்மித் இரங்கலுரையில் மேலும் தெரிவித்ததாவது.

பிரச்சினைகள், கருத்து முரண்பாடுகக்குப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வு காணப்பட வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவையின் முழுமையாகதன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு சேவையாளன் வன்முறைச் செயலுக்குப் பலியாகியுள்ளமை பேரிழப்பாகும்.

இம்மாதிரியான சோகங்கள் இனியும் இடம் பெறக்கூடாது என்பதே எமது விருப்பமாகும். சிறிதரனை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் ஏனையோருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வவுனியா அரசாங்க அதிபர் சார்பில் இங்கு உரையாற்றிய வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ரகுநாதபிள்ளை தெரிவித்ததாவது.

இரவு பகல் பாராமல் தனது சேவையையே கண்ணெனக்கருதி பணியாற்றிவந்த சிறந்த அரச ஊழியர் ஒருவரை நாம் இழந்துவிட்டோம். ஏனைய அரச ஊரியர்களுக்குத் தனது அயராத கடமை உணர்வு பூர்வமான செயற்திறனின் மூலம் முன்மாதிரியாக அவர் திகழ்ந்தார்.

பிற்ப்பவர் இறப்பது இயற்கை நியதியே. ஆனாலும் துயரம் மிக்க வகையில் அவருக்கு உயிர் இழப்பு ஏற்பட்டிருக்கக்கூடாது. ஈடு செய்ய முடியாத அவரது இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களையும் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வவுனியா மாவட்ட புனர்வாழ்வுப் பணிகக்கான திட்டப்பணிப்பாளர் எஸ். பரமகுலசிங்கம் பேசுகையில்.

சிறந்த நண்பனாகவும் திறமைவாய்ந்த சகஊழியனாகவும் திகழ்ந்த சிறிதரன் எந்த வேளையிலும் எத்தகைய பொறுப்பான பணிபளுக்கும் தயாராக இருந்தார். பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவைளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்த அவரைப்போலவேறு ஒருவரை இனி இவ்வுலகில் காணமுடியாது என்றார்.

நெடுங்கேணி பிரதேச செயலாளர் க.ஐயம் பிள்ளை, வவுனியா நீதிமன்ற முதலியார் தியாகராஜா ஆகியோரும் இங்கு இரங்கலுரையாற்றினார்கள்.

இப்பகுதியைச் சேர்ந்த பல்வேறுபட்ட தமிழ் சிங்கள பொது அமைப்புகளும் இவரது மறைவையொட்டி அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டிருந்தன.

**வீரகேசரி**
**15.01.96**

# வவுனியாவில் படுகொலை

வவுனியாவில் தியாகராஜா ஸ்ரீதரன் (35) என்ற இளைஞர் கழுத்து வெட்டப்பட்டு கொல்லப்பட்டுள்ளார். இவர் யு. என். எச். சீ. ஆரினால் வவுனியா சிதம்பரபுரத்தில் நிர்வகிக்கப்பட்டு வரும் நலன்புரி முகாமின் பொறுப்பாளராக கடமையாற்றி வந்தார். ஜனவரி 5ம் திகதி வெள்ளிக்கிழமை 6.45 மணியளவில் அலுவலகத்திலிருந்து வெளியேறிய இவர் வீடு வந்து சேரவில்லை. மறுநாள் காலையில் உள்சுற்று வீதியில் இவரது சடலம் கிடக்கக் காணப்பட்டது. அருகில் அவரது சைக்கில் கிடந்தது. அவரது பேர்சும் பையும் அருகிலுள்ளள வளவிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளனஇ

வயர் அல்லது கம்பி போன்ற பொருளொன்றினால் கழுத்து நெரிக்கப்பட்டிருப்பதோடு நெஞ்சில் மூன்று கத்திக் குத்துக் காயங்களும் காணப்பட்டன. எனினும் அவரணிந்திருந்த சேர்ட்டில் இரத்தக்கரை காணப்படாததால் இவர் கடத்திச் செல்லப்பட்டு இரகசிய இடமொன்றில் வைத்து கொல்லப்பட்ட பின் இங்கு கொண்டு வந்து போடப்பட்டிருக்கலாமென கருதப்படுகிறது.

ஏற்கனவே ஒரு மாதத்திற்கு முன்னரும் வைரவப் புலியங்குளம் எனுமிடத்தில் ஒரு இளைஞனின் சடலம் கண்டெடுக்கப்பட்டிருந்தது. அவ்விளைஞனும் இதே பாணியிலேயே கொல்லப்பட்டிருந்தான் என்பது குறிப்பிடத்தக்கது. அரச இராணவம் பொலிஸார் தமிழ் கட்சிகள் எல்லாம் முகாமிட்டிருக்கும் வவுனியா நகருக்குள் தான் இப்படுகொலை நடந்திருக்கிறது.

**சரிநிகர் 11.01.96**

---

## கண்ணீர் அஞ்சலி

சமூகசேவை அலுவலர்

# திரு. தியாகராசா ஸ்ரீதரன் B. Sc அவர்கள

மலர்வு 03 - 02 - 1960 உதிர்வு 06 - 01 - 1996

வவுனியா நலனோம்பு நிலையத்தின் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றிய வேளை அகால மரணமடைந்த அவலச்செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை யாக்குகின்றோம்.

**சமூகசேவை அலுவலர் சங்கம்**
**வடக்கு - கிழக்கு மாகாணம்**

ஈழநாடு
09-01-96

சிறியின் அகால அமரத்துவம்
குறித்து வெளியிடப்பட்ட
அஞ்சலிகள் சில....

# நினைவுகளில் வாழும்

# ஸ்ரீ

## அமரர் பொன்னுத்துரை தியாகராசா ஸ்ரீதரன்

**மலர்வு**
**03.02.1960**

**உதிர்வு**
**1996.01.06**

காலைப் பொழுது களிப்பைத்தரவில்லை
கவலைச் செய்தியை சோகத்தில் சுமந்தது
சாலையோரம் சரிந்த நிலையில் ஸ்ரீயின்
சாவைச் சொல்லி சோகம் நிறைந்தது.

இரவும் பகலும் பணியாற்றிய இனியவரை
இரக்கமின்றிக் கொன்றனரே - ஐயோ
எல்லோருக்கும் நல்ல நண்பனை
கொல்லவும் மனம் வந்ததோ ? - கொடுமை

கள்ளமில்லா உள்ளத்தவன் - என்றும்
கொள்ளைச்சிரிப்பால் கோபம் போக்கிடுவான்
கிள்ளியெறிந்தனரே எதிரிகள் - ஐயோ
உள்ளம் துடிக்கிறது என் செய்வோம்

இடம் பெயர்ந்தோர் நலன் நாளும்பேணி
வாழும் காலத்தே நல்லவை செய்தீர் நெஞ்சில்
வாழும் சிலரில் நீரும் ஒருவராய்
வாழ்வீர் என்றும் எம் நினைவிகளில்

***இனிய நண்பரின் ஆத்ம சாந்திக்கும்***
***அவர் குடும்ப நல்வாழ்வுக்கும்***
***நமது பிரார்த்தனைகள்***

**கச்சேரி அலுவலர்கள்**
மாவட்ட செயலகம்
வவுனியா.

## கண்ணீர் அஞ்சலி

பொன்னுத்துரை

# தியாகராசா சிறீதரன்

அவர்கள்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| **03.02.1960** | **1996.01.06** |

அகதியாய் அமைதி தேடி
அவலமாய் இடம் பெயர்ந்து
வன்னிக்கு வந்த மக்கள்
வளமாக வாழவென்று
அன்புக் கரம் நீட்டி
அரவணைத்தாய் ஆதரித்தாய்
பண்போடும் பரிவோடும்
பார்த்த பெருமகனே - நின்
அகால மரணமதால்
அகால துயரமுடன்
கண்ணீர் அஞ்சலியை
காணிக்கையாக்குகின்றோம்.

**அன்னாரின் பிரிவினால் மீளாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.**

துயருடன்
கிராமோதய சபை
வவுனியா நகரம்

# எமது இதய அஞ்சலி

# தியாகராசா ஸ்ரீதரன் (B. Sc. Hons.)

**மலர்வு**
**03.02.1960**

**உதிர்வு**
**1996.01.06**

எங்கள் சிறீதரனே
எங்கு நீ சென்று விட்டாய் ?
அன்புள்ள நண்பனாய்
அறிவுசார் நண்பனாய்
பண்புள்ள சேவகனாய்
பாரினில் வலம் வந்த
எங்கள் சிறீதரனே
எங்கு நீ சென்று விட்டாய் ?

கல்வியிலே வல்லோனாய்
கற்றறிவு உள்ளோனாய்
பல்கலைக் கழகம் சென்று
பட்டமெல்லாம் பெற்று விட்டும்
மக்கள் சேவையே - மகேசன் சேவையேன்று
மன்னுயிர்ச் சேவையே
மதிப்பாய் கொண்டோனே
உன்னுயிர் சென்ற வேளை
உதவிட யார் வந்தாரோ ?

விளையாட்டுத் துறைக்கு - நீ
வித்திட்ட சாதனைகள்
விண்ணிலே சென்ற பின்னும்
விளங்கிடுதே இப்புவியில்
நங்கூரச் சின்னத்தில்
நடக்கின்ற போட்டிகளில்
எங்கள் சிறீதரன்
எத்தனை உதவி செய்தான்

மண்ணதனில் வாழும் வரை - நல்
மானிடனாய் வாழ்ந்து காட்டி - எங்கள்
எண்ணமெல்லாம் நிறைந்து விட்ட
எமதருமைச் சிறீதரனே
உரித்தாகட்டும் இவ்வஞ்சலிகள்.

**நங்கூரம் விளையாட்டுக் கழகம்**
**வவுனியா.**

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகக்
கொண்டவரும்
வவுனியா வைரவ புளியங்குளத்தில் வசித்தவரும்
சமூகசேவை உத்தியோகத்தருமான

## திரு. பொன்னுத்துரை
## தியாகராசா சிறிதரன் (சிறி)

**அவர்கள்**

*1996 - 01 - 05 அன்று வவுனியாவில் அகாலமரணமானார்.*

*அன்னாரின் பிரிவால் துயருறும்*

*குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும்*

*சக்தி விளையாட்டுக் கழகத்தினர்*

*சிதம்பரபுர நலன்புரி நிலைய பொதுமக்கள் சார்பில்*

*அன்னாருக்கு தமது*

***கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக்***

***கொள்கின்றனர்.***

**சக்தி விளையாட்டுக் கழகம்**
**சிதம்பரபுரம்**

# திரு. தியாகராசா சிறீதரன்

அவர்களின் அகால மரணத்தால் அதிர்ச்சியுற்றிருக்கும் அன்பான நண்பர்களின் கண்களிலிருந்து
துளிகளாய்ச் சிந்தும்

## கண்ணீர் அஞ்சலி

எம் இதயத்தில் மலர்ந்த இணைபிரியா நண்பனே.......
என்றும் எம்மிடையே குலாவித்திரிந்த கோமகனே ........
எம்மைவிட்டு ஏனையா போய்விட்டீர் ?
நீண்ட வாழ்க்கைப் பயணத்தில்
நீயும் எம்மோடு இணைந்து வருவாய் என
நினைத்திருந்த எமக்கு நின்மரணச்செய்தியா
கிட்டிட வேண்டும். கிட்டிட வேண்டும்.......

சிறீதரா... எம் சிந்தை விட்டகலா
சிநேகிதா .... பள்ளிவாழ் நாள் தொட்டுப்
பழகி வந்த எம்மரிய பண்பாளனே.....
கல்வியில் வல்லவனாய் கலைகளில் தேர்ந்தவனாய்
எம்மோடு பயணம் செய்தாயே ..... இன்றும்
ஏனையா எம்மைத் தவிக்கவைத்து
தனிமரமாய் மீளாத்துயில் ஆழ்ந்து விட்டாய் ?

அன்னையவள் அங்கிருந்து ஆறாத்துயரில்
அழுதரற்றத் தந்தையவர் தவித்து நிற்க
எண்ணியே கைப்பிடித்த நாயகியவள்
என்ன செய்வதென்று அறியாமல் அவலங்கொள்ள
நன்மையிலும் தீமையிலும் நாளெல்லாம் இணைந்த
எம்மினிய நண்பனே. சிறீதரா....
உன்பிரிவால்வாடி உதிர்க்கின்றோம் கண்ணீர்த்துளிகள்

இளவயதிலேயே இப்படியொரு கொடியசாவா ?
இதயத்தில் நின்ற நண்பனே என் செய்வோம் ?
உறவின் பிரிவால் வாடி வதங்கும் உன் நண்பர்கள்
உதிர்க்கும் கண்ணீர்த்துளிகளால் அர்ச்சிக்கின்றோம்.

**10.01.1996**
**இணைபிரியா இதயங்கள்.**

# உயர்திரு. பொ. தி. சிறீதரன்

## மனம்வருந்தி அன்னாருக்கு
## அளிக்கும் மலரஞ்சலி

**மலர்வு** — **03.02.1960**

**உதிர்வு** — **1996.01.06**

*வைரவ புளியங்குளம் வளர்த்தெடுத்த வைரமுத்து*

*மக்களை யெல்லாம் மகிழவைத்த மக்கள் மைந்தன்*

*அண்டினோரை அரவணைத்த அன்பின் தென்றல்*

*அகதிகளின்குறைதீர்த்த அருமைச் செம்மல்*

*பண்பான பெற்றோரைப் பிரிந்த பின்னும்*

*பாசமிகு மனையாளை மறந்து சென்றும்*

*எங்களை என்றும் நீ மறக்கலாமோ ?*

**வைரவபுளியங்குளம்**
**கிராமோதய சபை**

நீங்கள் நினைவுகளாய் நெஞ்சங்களில் நிலைபெற்றுவிட்ட

# அமரர் தியாகராசா சிறீதரன்

## கண்ணீர் அஞ்சலி

சமூகத்தின் சேவகனாய்
சமூகசேவை உத்தியோகத்தராய்
ஈர் மூன்று ஆண்டுகளாய்
இடர்களேது மில்லாது

காலம் நேரம் பாராது
கடமைபுரிந்த உன்னை
காலன் அவன் கவர்ந்தானே
காரணம் சொல்லாது

இன்னல்களால் இடம்பெயர்ந்து
இருப்பிடத்தை இழந்தோரை
ஆண்டாண்டாய் பராமரித்தாய்
அற்புதமாய் சேவை செய்தாய்

சிரித்த முகத்துடனே
சிறீதரா நீ சேவையிலே
உன்னத பணிபுரிந்தாய்
உன்பணி முடியுமுன்னே

நாற்சந்தி மூலையிலே
நட்டநடுத் தெருவினிலே
நீ கிடந்த நிலை என்ன
எமை நிலை குழம்ப வைத்ததென்ன

பிரதேச செயலகத்தில்
பிரியமுடன் பழகினாயே
பிரிவுத் துயரில் ஆழ்த்திவிட்டு
பிரிந்துதான் சென்றதேனோ

புத்தம் புதுமலராய்
பூத்துக் குலுங்குமுன்னே
கொத்தாக அறுத்தெறிந்த
கொடுமைதனைப் பொறுக்கலையே

எதனால் வந்ததையா
உனக்கிந்த நிலை என்று எல்லோரையும்
ஏங்கித்தவிக்க வைத்துவிட்டு
இறைவனடி சேர்ந்தாயோ

இன் முகத்துடன் இட்டபணி செய்த
உன் பணியை ஈடுசெய்ய இனி
யார்தான் வருவாரோ
இப்பணி மனைக்கு

சாதிசனம் உனக்கிருந்தும்
அன்னவரைப் பரிதவிக்கவிட்டு
மண்ணில் நீ மறைந்தாயே
எம் மனங்களில் நீ நிறைந்தாயே

சாந்தி செய்ய சொல்லிவிட்டு
மாண்டு விட்டாயே
இறைவா அவன் ஆத்மா சாந்திக்கு
அருள் புரிவாயாக

*அன்னாரின் குடும்பத்தார்க்கும் உற்றார் உறவினர்க்கும்*
*எமது கண்ணீர் அஞ்சலி*

**பிரதேச செயலக அலுவலர்கள்**
**வவுனியா**

## அஞ்சலிக்கின்றோம்
## மறைந்தும் மறையாத

# உயர்திரு. பொ. தி. சிறீதரன்

**எங்களுடன்**
**03.02.1960**

**இறைவனுடன்**
**1996.01.06**

*சேவைக்குச் சேவகனாய் அன்பின் உறைவிடமாய்*
*அகதிகட்கு அரவணைப்பாய்*
*அல்லும் பகலும் அயராது உழைத்திட்ட*
***அன்பின் சிறீயே***

நீ உமைப்பிரிந்து சென்றதுவேன்?
செய்த சேவையினை இடைநிறுத்த கரலன் உமக்கேதும்
கட்டளைதானிட்டானோ ?

அன்பு மனைவி றெஜீதா விம்மிக் கதறியழ
பாசமிகு பெற்றோர் பரிதவித்து ஏங்கி நிற்க
அன்பு நண்பர்கள் நாம் செயலிழந்து சொல்லியழ,
நீண்ட நெடுந்தூரம் நீ அங்கு சென்றதேனோ ?

சிரித்த முகமும், சிறுநடையும் கொண்ட அன்பின் சிறீயே
எமை நீ மறந்த ஏகதூரம் சென்றதேனோ ?

**பிரிந்தும் பிரியாத**
**அரசசேவை ஊழியர்**
**பொழுது போக்குக் கழகம்**
**வவுனியா.**

# படுகொலை செய்யப்பட்ட ஸ்ரீதரன் அவர்கட்கு எமது இதய அஞ்சலி

## வாழவே பிறந்தோம் மூக்கும் முழியுமாக வாழவே பிறந்தோம்

மனித வாழ்க்கையின் அர்த்தம் என்ன மானிடர்களின் தேடல் தான் என்ன ?

* வாழ்க்கையின் மேம்பாடு
* பொருளியல் ஆன்மீக விடுதலை

தனது இதுவரைகால வரலாற்றில் இந்த இலட்சியங்களுக்காக எத்தனை கோடி மனிதர்கள் தமது உயர்ந்த தியாகங்களைச் செய்தார்கள் அந்த வகையில் ஸ்ரீயின் மரணம் எத்தகையது ? அகதிகளாகப் போய்விட்ட எமது மக்களின் வாழ்க்கையை மீள்நிர்மாணிப்பதற்கான பணியில் ஈடுபட்டு இருந்தவர் அவர். அகதி வாழ்வே நிரந்தரமாகி எமது சமுதாயம் சீரழிந்து விடக் கூடாது என்ற அந்தரங்க சுத்தியுடன் செயற்பட்டவர். யாருடனும் அதிர்ந்து பேசாது இன் முகத்துடன் செயற்பட்டவர். மிக நெருக்கடியான காலகட்டத்தில் மிகக் கடினமான மனிதாபிமான பணிகள் மேற்கொண்டிருந்தவர். ஒரு முழுநிறைவு பெற்ற மனிதனின் குணாதிசயங்கள் அவரிடம் காணப்பட்டன. காட்டுமிராண்டித்தனம் ஆதிக்கம் வகிக்கும் ஒரு சமுதாயத்தில் இத்தகைய மனிதர்கள் அரிதாகத் தான் காணலாம்.

பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாஸ்திரங்கள் என்று பாரதி ஏற்கனவே கூறிவிட்டான்தான் சார்ந்த சமூகத்திற்காக நேரம் காலம் பாராது உழைக்கும் ஒரு மனிதன் சமுதாயத்தின் மிக அத்தியாவசிய பிரிவைச் சேர்ந்தவன். அப்படியானால் அவனைக் குரூரத்தனமாக உடல் மீதி இன்றி அழிப்பவர்கள் சமுதாயத்தில் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் ? அவர்கள் நிச்சயமாக காட்டுமிராண்டிப் பிரிவைச் சேர்ந்தவர்கள். சமுதாயத்தில் அத்தகையோரின் அதிகரிப்பு எத்தகைய விளைவை உண்டாக்கும் ? எதனை மிஞ்சவைக்கும். சிந்திக்க வேண்டிய கேள்விகளே இவை.

* சமுதாயத்தை பீதியின் நிழலில் வாழவைப்பது.
* கொடுரமான சர்வாதிகார மனம் படைத்தவர்களின் பின்னால் பலி ஆடுகள் போல் நடக்க வைப்பது.

தமது குரூரமான சுயநலம் நிறைந்த சிந்தனைகளுக்கு இசைவாக சமுதாயம் இருக்க வேண்டும் என இவர்கள் எதிர்பார்க்கிறார்கள் இத்தகைய ஒரு போக்கு கடந்த 16 வருடங்களில் வளர்ச்சி பெற்ற எய்ட்ஸ் போன்ற ஒரு கொடிய தொற்று வியாதியாக பரவி வருகிறது. இதனைத் தடுத்து நிறுத்துவதானால் மக்கள் செயலில் இறங்கி ஆகவேண்டும் செயற்படாவிட்டால் இந்த நோய்முழுச் சமுதாயத்தையே விழுங்கிவிடும்.

விரானியால் பாடப்பெற்ற சம்ஷ் சின் பிரபலமான தொலைக்காட்சி பாடல் ஒலிக்கும் போதும் ஸ்ரீயும் வவுனியா ரயில் நிலையத்தில் வந்து இறங்கும் அகதிகளான மக்களுக்கு சேவை செய்துகொண்டு நிற்பார். ஆனால் ஸ்ரீ இன் மரணம் அந்தப் பாடலின் முகத்தில் இரத்தத்தை பீச்சியடித்தது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

* நாம் எல்லோரும் சவப்பெட்டி கடைகளைத் திறப்போம்.

புத்தம் புதிய வாடாத மலர்களை கொண்ட மலர் –
வளையங்களை முன்னரங்கில் அடுக்குவோம்.

* வாழ்க மரணம் என்று உரக்கப்பாடுவோம்

* நாம் மனிதர்களே அல்ல காட்டுமிராண்டிகள் என்று பிரகடனம் செய்வோம்
சீ.. வெட்கம் கெட்ட வாழ்க்கை சாக்கடையில் நெழியும்
புழுவிலும் கேடுகெட்ட வாழ்க்கை.

ஏய் தமிழ் சமுதாயமே எப்போது விழித்தெழுந்து நிற்கப்போகிறாய் ? நீ தொடர்ந்து மௌனமாக இருக்கமுடியாது உனது மானிட சிலிர்ப்பில் உண்மை பிரசவமாகும் அப்போது படுகொலை செய்யப்பட்ட ஸ்ரீ அவரைப்போன்ற நல்ல மனிதர்கள் புதைகுழிகளிலிருந்து மக்களின் தோளில் சுமந்து வரப்படுவார்கள்.

படுகொலை செய்யப்பட்ட ஸ்ரீக்கு எம் இதய அஞ்சலி அன்னாரின் குடும்பத்திற்கும் அவர் நேசித்த அகதிகளான எம் மக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஈ. பி. ஆர். எல். எப்.**

வவுனியா பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தரும்,
சிதம்பரபுர நலன்புரி நிலைய பொறுப்பாளருமாகிய

# உயர்திரு. தியாகராசா சிறீதரன்

**அவர்களுக்கு எங்கள்**

# கண்ணீர் அஞ்சலி

**மண்ணில்**
**03.02.1960**

**விண்ணில்**
**1996.01.06**

1996 - 01 - 5ம் திகதி அகால மரணமடைந்த 11 - 01 - 1996 வியாழக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இறம்பைக்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யவிருக்கும்

# உயர்திரு. தியாகராசா சிறிதரன்

**அவர்களுக்கு**

எங்கள் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி தாய், தந்தை, குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சிதம்பரபுர**
**நலன்புரி நிலைய வர்த்தகர்கள்.**

திரு. பொ. தி. ஸ்ரீதரன் (Bsc. Hons)

# நண்பா போய்வா

மானுடத்தின் கழுத்தில்
ஒரு கத்தி இறங்கிய
சேதி கேட்டு - நாம்
விக்கித்துப் போனோம் - நண்பா

விக்கித்து விறைத்து
செயலற்று போவதன்றி
ஏது செய்ய எம் நண்பனே

கதை கதையாய் பேசும் - உன்
குரல் வளை பிழந்து
எவன் தேடி போனானடா ?

காற்றியும் காரிருள் அறியும்
நாம் ஏதறிவோம் எம் நண்பா

கதியற்று வந்தவரின்
கண்ணீரின் பாசை தெரிந்தவன் - நீ
இன்றோ மௌனமே
உன் பாசையாகிப் போனது

நிரந்தரமாக விடைபெற்றுச்
செல்கிறாய் - சிறி
நிறைவாக ஒன்று.....
எம் நகரச் சந்தியில்
இரத்தம் சிந்தி வீழ்ந்தது - நீயல்ல
அது மானுடம்

## சிதம்பர நலன்புரி நிலைய மக்களுக்காய்......





உ

# யாழ் நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சிவன் கோவில்

# நல்லைநாயகி திருஊஞ்சற் பாமாலை

## இராகம் மோகனம்

### விநாயகர் காப்பு.

ஈழத் தின்வட பால்மேலாம்
இசையின் புகழைச் செப்பிடுமாம்
யாழின் நாமம் கொண்டதாம்
யாழ்ப் பாணத்து நல்லூரில்
வாழ்வை அருளுமெம் நாயகிக்கு
வனப்பாய் ஊஞ்சற் பாட்டிசைக்க
வேளமுகத்தன் விநாயகனை
விரும்பி போற்றி வழிபடுவோம்.

மின்னும் நவரத் தினத்தூண்கள்
மேவும் தரளக் கயிற்றோடு
மன்னும் பொன்னார் பீடமதில்
மணமார் பூவில் அமர்ந்தருளிச்
சென்னி மீதில் மணிமுடியும்
சிறக்க நல்லூர் மீதினிலே
என்றும் ஆட்சி புரிகின்ற
அன்னாய் ! மகிழ்ந்தா டீரூஞ்சல்

கல்வி செல்வம் வீரமிவை
கழலை வணங்கு வோர்க்காவாய்
எல்லை யில்லா அழகுடனே
இருந்தே எமக்கு அருள்பவளே
தொல்லை களைநீ நீக்கிடவே
தொழும்நல் லடியார் துயர்தீக்க
எல்லையில்லாப் புகழ் நல்லூர்
எந்தாய் மகிழ்ந்தா டீரூஞ்சல்

நாடித் தொழும்நல் அன்பர்க்கே
நல்ல வரங்கள் நீஅருள்வாய்
கூடி வணங்கும் மாந்தர்தம்
கொடிய அசுர மனங்களையே
நாடி அழிக்கும் நாயகியே
நல்லவை யாவும் தருபவளே
தேடி வந்தெம் நல்லூரில்
திகழும் தேவியா டீரூஞ்சல்

அகில மெங்கும் நிறைந்திங்கே
ஆய கலைகள் அளிப்பவளே
இகம்வாழ் உயிர்கள் உணர்ந்திடவே
இதமார் இன்பம் ஈபவளே
மகிமை மிக்க நல்லூரின்
மக்கள் போற்றப் பெருமானார்
உகக்கும் காதற் குரியவளே
உவந்தே நன்கா டீரூஞ்சல்

திசைகள் எங்கும் முழங்கிடுவாள்
தீயவினைகள் போக்கிடுவாள்
நிசமாய்க் கைதொழும் அடியவர்க்கே
நித்தம் வரங்கள் அருள்தாயே
அசையும் உயிர்கள் யாவைக்கும்
அன்பின் விசையாய் அமைந்தவளே
நசையில் அடியார் சூழ்நல்லை
நாயகி ஊஞ்சல் ஆடீரே.

ஒவ்வோர் கலையும் உன்நாமம்
ஒவ்வோர் செயலும் உன்ரூபம்
பவ்வியமான இசைதனிலும்
பரவி ஒலிக்கும் உன்நாதம்
கவலை தீரத் தொழுபவரைக்
காக்கும் அன்னாய் நல்லூரில்
செவ்வையாக அமர்ந்திடுவாய்
சிறப்பாய் உகந்தா டீரூஞ்சல்

பல்கிப் பெருகிப் பலவாறு
பாலித் திடும்எல் லாமதுவே
செல்வ அபிரா மிப்பெயராம்
சீரும் இன்பும் வழங்கிடவே
நல்லைப் பதியில் நீயாகி
நலமோ டருளக் கண்டோம் நாம்.
எல்லை யில்லாப் புகழ்த்தாயே
எழிலோ டிருந்தா டீரூஞ்சல்

மனதில் உள்ள தீமைகளாம்
மகிடா சுரனை அழித்திடுவாய்
நினதருள் வேண்டி வணங்கிடவே
நினைவில் நீயாய் உறைந்திடுவாய்
வினைகள் யாவும் போக்கிநீயும்
மேன்மை தரும்நல் லூர்த்தேவி
இனிய நீல மேனியினாய்
எழிலோ டினிதா டீரூஞ்சல்

வணங்கும் ஊமைப் பாலகனாம்
வித்யா பதிக்கு வரமீந்தாய்
குணங்கொள் கவிதைப் பாவலனைக்
குமரகுருவாய் உயர்த்தி வைத்தாய்
பிணங்கும் குறைகள் போக்கிநிதம்
பெருவாழ் வீந்து நல்லூரில்
அணங்காய் ஒளிரும் எம்மன்னாய்::
அழகாய் இனிதா டீரூஞ்சல்

இதமாய் மக்கள் இன்புறவும்
என்றும் அறங்கள் ஓங்கிடவும்
நிதமும் அடியார் வணங்கிடவும்
நேசில் சட்ட நாதனுடன்
நதிபோல் வந்து கலந்திட்ட
நல்லைப் பதியின் நாயகியே
உதவும் கரத்தாய் மங்களங்கள்
உனக்கே மகிழ்ந்தா டீரூஞ்சல்.

*ஆக்கம் – **செல்வி .கோபாலரத்தினம் சசிகலா***
*நல்லூார்.*

உ

# விநாயகர் கவசம்

## காசிப முனிவர்
## (தமிழில் கச்சியப்ப சுவாமிகள்)

வளர்ச்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
    யகர்காக்க; வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேகம்
    மதோற்கடர்தாம் அமர்ந்து காக்க;
விளரறநெற் றியைஎன்றும் விளங்கியகா
    சிபர்காக்க; புருவம் தம்மைத்
தளர்வில் மகோதரர்காக்க; தடவிழிகள்
    பால சந்திரானார் காக்க

கவின் வளரும் அதரங்கச முகர்காக்க;
    தால் அங்கணக் கிரீடர் காக்க;
நவில்சிபுகம்ாசைசுதர் காக்க; நனி
    வாக்கைவிநா யகர்தாம் காக்க;
அவிர் நகைதுன் முகர்காக்க; அள்ளெழிற்செஞ்
    செவிபாச பாணி காக்க;
அவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
    சியைச் சிந்தி தார்த்தர் காக்க;

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
    காக்க; களங்கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த
    பூர்வசர் தாம் மகிழ்ந்து காக்க;
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
    சன்காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க; அகட்
    டினைத் துலங்கே ரம்பர் காக்க;

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க;
    பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்ககினக வன்காக்க; விளங்கிலிங்கம்
    வியாளபூ டணர்தாம் காக்க;
தக்குய்யந் தன்னைவக் கிரதுண்டர்
    காக்க; சகனத்தை அல்லல்
உக்ககண பன்காக்க; ஊருவைமங்
    களமூர்த்தி உவந்து காக்க;

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்க; இரு
பதம் ஏக தந்தர் காக்க;
வழகரம்கிப் பிரப்பிரசா தனர்காக்க;
முன்கையை வணங்குவார் நோய்
ஆழ்தரச்செய் ஆசாபூ ரகர்காக்க;
விரல்பதும அத்தர் காக்க;
கேழ்கிளரும் நகங்கள் விநா யகர்காக்க;
கிழக்கினிற்புத் தீசர் காக்க

அக்கினியில் சித்தீசர் காக்க
உமாபுத்திரர் தென்திசை காக்க
மிக்மநிரு தியிற்கணே சுரர் காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்க வாயுவிற்கசகன்
னர்காக்க திகழ்உ தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கில்
ஈசநந் தன்ரே காக்க

ஏகதந்தர் பகல்முழுவதும் காக்க இர
வினும்சந்தி இரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்க இராக்
கதர்பூதம் உறுவே தாளம்
மோகினிப்பேய் இவையாதி உயிர்த்திற த்தால்
வருந்துயரும் முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபு பா
சாங்குசர்தாம் விரைந்து காக்க

மதி ஞானம் தவம் தானம் மானம் ஒளி
புகழ் குலம் வண்சரீரம் முற்றும்
பதிவான தனம் தானி யம் கிரகம்
மனைவி மைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க

வென்றி சீவிதங் கபிலர் காக்க கரி
யாதியெல்லாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும்
ஓதிடின் நும்பால் இடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரவர்கள் அறிமின்கள்
யார் ஒருவர் ஓதினாலும்
மன்றவாங் கவர்தேகம் பிணியற வச்
சிரதேகம் ஆகி மன்னும்

## முகவுரை

தற்காலத்தில் மக்கள் கரத்தும் மனத்தும் பயின்றுவரும் கந்தசஷ்டிக் கவசம் திருச்செந்தூர்ப் பெருமானை நினைந்து பாடியதாகும். முருகன் எழுந்தருளும் ஆறுபடை வீடுகளுள் ஒன்றாகிய செந்தூர்க் கந்தவேளுக்கெனப் பாடிய இந்த நூலைப் போலவே மற்றைய ஐந்து படை வீடுகட்கும் தேவராய சுவாமிகள் ஐந்து தனிக் கவச நூல்களைப் பாடியுள்ளார். அவ் வைந்தும் இதுகாறும் வெளிவராதிருந்தது தமிழர் தவக்குறையே. ஆறுபடைவீடுகளின் கந்தர் சஷ்டிக் கவசங்கள் எனும் இத்தொகுப்பை தினமும் ஓதித் திருவருள் பெற்று உய்வார்களாக.

உ

முருகா

# கந்தர் சஷ்டி கவசம்

## திருப்பரங்குன்றுறைதீரன்

### முதலாவது கவசம்

### காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம். துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்(து) ஓங்கும்
நிட்டையும் கைகூடும். நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந்தனை.

அமரர் இடர் தீர. அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

### நூல்

திருப்பரங் குன்றுறை தீரனே குகனே
மருப்பிலாப் பொருளே வள்ளி மனோகரா
குறுக்குத் துறையுறை குமரனே அரனே
இருக்கும் குருபரா ஏரகப் பெருமாளே
வையா புரியில் மகிழ்ந்து வாழ்பவனே
ஒய்யார மயில்மேல் உகந்தாய் நமோநமோ
ஐயா குமரா அருளே நமோ நமோ
மெய்யாய் விளங்கும் வேலா நமோ நமோ

பழநியங் கிரிவாழ் பகவா நமோ நமோ
மழுவுடை முதல்வன் மதலாய் நமோ நமோ
விராலி மலையுறை விமலா நமோ நமோ
மராமரம் துளைத்தோன் மருகா நமோ நமோ
சூரசம் காரா துரையே நமோ நமோ

வீரவே லேந்தும் வேளே நமோ நமோ
பன்னிரு கரமுடைப் பரமா நமோ நமோ
கண்களீ ராறுடைக் கந்தா நமோ நமோ
கோழிக் கொடியுடைக் கோவ நமோ நமோ
ஆழிசூழ் செந்தில் அமர்ந்தாய் நமோ நமோ
சசச சசச ஓம் ரீம்
ரரர ரரர ரீம் ரீம்
வவவ வவவ ஆம் ஹோம்
ணணண ணணண வாம் ஹோம்
பபப பபப சாம் சூம்
வவவ வவவ கௌம் ஓம்
லல லிலி லுலு நாட்டிய அட்சரம்
கக கக கக கந்தனே வருக
இக இக இக ஈசனே வருக

தக தக தக சற்குரு வருக
பக பக பக பரந்தாமா வருக
வருக வருகவென் வள்ளலே வருக
வருக வருகநிஷ் களங்கனே வருக
தாயென நின்னிரு தாள்பணிந் தேன்எனைச்
சேயெனக் காத்தருள் திவ்யமா முகனே
அல்லும் பகலும் அனுதினம் என்னை
வல்ல விடங்கள் வாராமல் தடுத்து
நல்ல மனத்துடன் ஞான குருஉனை
வணங்கித் துதிக்க மகிழ்ந்து நீ வரங்கள்
இணங்கியே அருள்வாய் இறைவா எப்போதும்
கந்தா கடம்பா கார்த்தி கேயா
நந்தன் மருகா நாரணி சேயே
எண்ணிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனை

தண்ணளி அளிக்கும் சாமி நாதா
சிவகிரி கயிலை திருப்பதி வேளூர்
தவக்கதிர் காமம் சார்திருவேரகம்
கண்ணுள் மணிபோல் கருதிடும் வயலூர்

விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்
தன்னிக ரில்லாத் தலங்களைக் கொண்டு
சன்னிதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக் (கு) அன்புடன் தமிழைச்
செகத்தோர் அறியச் செப்பிய கோவே
சித்துகள் ஆடு சிதம்பர சக்கரம்
நர்த்தனம் புரியும் நாற்பத்தெண் கோணம்
வித்தாய் நின்ற மெய்ப்பொருளோனே
உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே
வெற்றிக் கொடியுடை வேலே போற்றி

பக்திசெய் தேவர் பயனே போற்றி
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவா போற்றி
அத்தன் அரியபன் அம்பிகை லட்சுமி
வாணி யுடனே வரையுமாக் கலைகளும்
தானே நானென்று சண்முக மாகத்
தாரணி யுள்ளோர் சகலரும் போற்றப்
பூரண கிருபை புரிபவா போற்றி
பூதலத்துள்ள புண்ணிய தீர்த் தங்கள்
ஓதமார் கடல்சூழ் ஒளிர்புவி கிரிகளில்
எண்ணிலாத் தலங்கள் இனிதெழுந் தருள்வாய்
பண்ணும் நிட்டைகள் பலபல வெல்லாம்
கள்ளம் அபசாரம் கர்த்தனே எல்லாம்
எள்ளினுள் எண்ணெய்போல் எழிலுடை உன்னை
அல்லும் பகலும் ஆதாரத்துடன்.

சல்லாப மாய்உனைத் தானுறச் செய்தால்
எல்லா வல்லமை இமைப்பினில் அருளி
பல்லா யிரநூல் பகர்ந்தருள்வாயே
செந்தில் நகர்உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
அரன் மகிழ் புதல்வா ஆறுமுகா சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

# கந்தர் சஷ்டி கவசம்

## செந்தி மேய கந்தவேள்

### இரண்டாவது கவசம்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ் செய்யும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்க வென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!

வாசவன் மருகா வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறுஇடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரவண பவச ரரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம!
நிபவ சரவண நிற நிற நிறென
வசர வணப வருக வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண் டாயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந் தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவகுகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்

பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் (து) அழகிய மார்பில்

பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற் சீராவும்
இருதொடை அழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகனென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி

டுடுடுடு டுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று
உன்திரு வடியை உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்து உன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க

கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க

மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்

அடியனைக் கண்டால் அலறி கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்

எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாள் எனைக்கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டு உடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்மு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்குச் செதில் செதிலாக
சொக்கு சொக்குச் சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலேரி தணலதுவாக
விடுவடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன் நரி நாயும்

எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுத்து உயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்

எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக்கு அருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காக
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்

உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவம் ஒளி பவனே!
அரிதிரு மருகா அமராபதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனிய வேல்முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமார
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன்பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத்தாக வேலாயுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன் கடன்

பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென்று அன்பாய் பிரியம் அளித்து
மைந்தன் என்மீது உன் மனம் மகிழ்ந்து அருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையும் மாலையும் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுஉருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய

அட்டதிக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்க ருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல் எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்

இருபத் தெழுவர்க்கு உவந்து அமுது அளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்து ஆட்கொள எந்தனது உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

உ

# கந்தர் சஷ்டி கவசம்

## பழநிப் பதியொளிர் பரமன்

### மூன்றாவது கவசம்

திருவா வினன்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தைவே லாயுதா
சரவணை சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா ஏழைபங் காளா
பரமேசு வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக் (கு) அருள்வாய் வாமனன் மருகா
இரண்டா யிரம்வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா ருகமனம் தீர்க்கம் படைத்தவா
இலட்சத் திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத் துடனே பாராசக்தி வேலதாய்
வீர வாகு மிகுதள கர்த்தனாய்

சூரசம் சாரா துஷ்டநிஷ் டூரா
கயிலாய மேவும் கனகசிம் மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக் (கு) அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முருகாற் றுப்படை சொல்லிய
நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் கனமிசைக் குதவா
திருவரு ணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா
ஆயிரத் தெட்டாம் அருள்சிவ தலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணா யிரம்மண் எதிர்கழு வேற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவா
குருவாம் பிரமனைக் கொடுஞ்சிறை வைத்து
உருப்பொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்
கருதிமெய் யோகம் சொல்லிய (து) ஒரு முகம்
அருள்பெரு மயில்மீ (து) அமர்ந்த (து) ஒருமுகம்

வள்ளிதெய் வானையை மருவிய(து) ஒருமுகம்
தெள்ளுநான் முகன்போல் சிருட்டிப்ப(து) ஒருமுகம்
சூரனை வேலால் துணித்த (து) ஒருமுகம்
ஆரணம் ஓதும் அருமறை யடியார்
தானவர் வேண்டுவ தருவ(து) ஒருமுகம்
ஞான முதல்வர்க்கு நற்பிள்ளை பழநி

திருப் பரங் கிரிவாழ் தேவா நமோநம
பொருட்செந்தில் அம்பதி புரப்பாய் நமோநம
ஏரகம் தனில்வாழ் இறைவா நமோநம
கூரகம் ஆவினன் குடியாய் நமோநம
சர்வசங் கிரிக்குத் தனயா நமோநம
உறுசோலை மலைமேல் உகந்தாய் நமோநம
எல்லாக் கிரிக்கும் இறைவா நமோநம
உல்லா சத்துறும் ஓங்கார வடிவே
மூலவட்டத்தில் முளைத்தெழும் சோதியை

சால முக்கோணத் தந்தமுச் சத்தியை
வேலா யுதமுடன் விளங்கிடும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை
கைலாச மேருவா காசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி
மேலும் பகலும் விண்ணுரு வேத்தி
நாற் கோணத்தில் நளினமாய் அர்ச்சனை
கங்கை யீசன் கருதிய நீர்புரை
செங்சண்மால் திருவும் சேர்த்துசெய் அர்ச்சனை
அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்
முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய் அறு கோணம் மகேஸ்வரன் மகேஸ்வரி
ஐயும் கருநெல்லி வெண்சாரை தன்மேல்
ஆகாச வட்டத்(து) அமர்ந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை
தந்திர அர்ச்சனை தலைமேல் கொண்டு
மந்திர மூலத்தில் வாசியைக் கட்டி

அக்கினிக் குதிரை ஆகாசத் தேவி
மிக்காய் கருநெல்லி வெண்சாரை உண்பவர்
பாகமாய் ரதமும் பகல்வழி யாரை
சாகா வகையும் தன்னை அறிந்து
ஐந்து சீவனுடன் ஐயஞ்சு கல்பமும்
விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி
சந்திர சூரியர் தம்முடன் அக்கினி
அந்தி ரனைக்கண் (டு) அறிந்தே யிடமாய்ச்
சிந்தையுள் ஏற்றுச் சிவசம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவா என்று
தேறுமுகம் சென்னி சிவகிரி மீதில்
ஆறுமுகமாய் அகத்துளே நின்று
வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடல்விளை யாடி

மேலைக் கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலை குழந்தை வடிவையும் காட்டி
நகரைதரை மாற்றி நாலையும் காட்டி

உரைசிவ யோகம் உபதேசம் செப்பி
மனத்தில் பிரியா வங்கண மாக
நினைத்த படிஎன் நெஞ்சத் திருந்து
அதிசயம் என்றுன் அடியார்க் (கு) இரங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து
நானே நீயெனும் வட்சணத் துடனே
தேனே என்னுள்ளம் சிவகிரி எனவே
ஆறா தாரத்(து) ஆறு முகமும்
மாறாதிருகும் வடிவையும் காட்டிக்
கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்கத்
தனதென வந்து தயவுடன் இரங்கிச்
சங்கொடு சக்கரம் சண்முக தெரிசனம்
எங்கு நினைத்தாலும் என்முன் னேவந்து
அஷ்டாவ தானம் அறிந்துடன் சொல்லத்
தட்டாத வாக்கும் சர்வா பரணமும்
இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கத்
துலக்கிய காவியம் சொற்பிர பந்தம்

எழுத்துச் சொற்பொருள் யாப்பலங் காரம்
வாழ்த்தும்என் நாவில் வந்தினி திருந்தே
அமுத வாக்குடன் அடியார்க்கும் வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசமென
வச்சிர சரீரம் மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக்(கு) உதவி
வல்லமை யோகம் வசீகர சக்தி
நல்லஉன் பாதமும் நாடிய பொருளும்
சகலகலை ஞானமும் தானெனக் கருளி
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கலிபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில்மயில் ஏறிக்
கிட்டவே வந்து கிருபை பாலிக்க
அட்டதுட் டமுடன் அனேக மூர்க்கமாய்
துட்டதே வதையும் துட்டப்பிசாசும்
வெட்டுண்ட பேயும் விரிசடைப் பூதமும்
வேதாளம் கூளி விடும் வில்லி வஞ்சனை.

பேதாளம் துன்பப் பிசாசுகள் நடுநடுங்க
பதைபதைத் தஞ்சிடப் பாசத்தால் கட்டி
உதைத்து மிதித்தங்(கு) உருட்டி நொருக்கிச்
சூலத்தாற் குத்தித் தூளுதூ ளுருவி
வேலா யுதத்தால் வீசிப் பருகி
மழுவிட் டேவி வடவாக் கினிபோல்
தழுவிஅக் கினியாய்த் தானே எரித்துச்
சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதம்பெறும் காளி வல்ல சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகர்ம வீர பத்திரன் சக்கரம்
திருவை குண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகிரி அக்கினி சக்கரம்
சண்முக சக்கரம் தண்டா யுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்
ஏக ரூபமாய் என்முன்னே நின்று
வாகனத் துடன்என் மனத்துன் இருந்து

தம்பனம் மோகனம் தயவாம் வசீகரம்
இம்பமா கருடணம் மேவுமுச் சாடனம்
வம்பதாம் பேதனம் வலி தரும் ஆரணம்
உம்பர்கள் ஏத்தும் உயர்வித் வேடணம்
தந்திர மந்திரம் தருமணி அட்சரம்
உந்தன் விபூதி யுடனே சபித்து
கந்தனின் தோத்திரம் கவசமாய் காக்க
எந்தன் மனத்துள் ஏதுவேண் டியதும்
தந்துரட் சித்தருள் தயாபரா சரணம்
சந்தம் எனக்கருள் சண்முகா சரணம்
சரணம் சரணம் சட்கோண இறைவா
சரணம் சரணம் சத்துரு சம்காரா
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

# கந்தர் சஷ்டி கவசம்

## திருவேரகத்துறை பெருமான்

### நான்காவது கவசம்

ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த கனமறைப் பொருளே
ஓங்கார மாக உதயத் தெழுந்தே
ஆங்கார மான அரக்கர் குலத்தை
வேரறக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரரைத் துண்டதுண் டங்களாய்
வேலா யுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழனியின் கோவே
நான்கு மறைகள் நாடியே தேடும்
மான்மரு கோனே வள்ளி மணாளனே
நானெனும் ஆண்மை நண்ணிடா(து) என்னைக்

காணநீ வந்து காப்பதுன் கடனே
காளி கூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் முதல்வா புனித குமரா
சித்தர்கள் போற்றும் தேசிகா போற்றி
ஏகாட் சரமாய் எங்கும் தானாகி
வாகாாய் நின்ற மறைமுதற் பொருளே
துதியட் சரத்தால் தொல்லுல(கு) எல்லாம்
அதிசய மாக அமைத்தவா போற்றி
திரியாட் சரத்ததால் சிவனயன் மாலும்
விரிபா ருலகில் மேன்மை யுற்றவனே
சதுரட் சரத்தால் சாற்றுநல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே
பஞ்சாட் சரத்தால் பரமன் உருவதாய்த்
தஞ்சமென் றோரைத் தழைத்திடச் செய்தென்
நெஞ்சகத்(து) இருக்கும் நித்தனே சரணம்
அஞ்சலி செய்த அமரரைக் காக்கும்

ஆறு கோணமாய் ஆறெழுத் தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்
ஆறிரு செவியும் அமர்ந்த மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்

சரவணை வந்த சடாட்சரப் பொருளே
அரணயன் வாழ்த்தும் அப்பனே கந்தா
கரங்கள்பன் னிரண்டில் கதிரும் ஆயுதத்தால்
தரங்குலைத்(து) ஓடத் தாரகா சுரன்முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தோய்
சீர்திருச் செந்தூர்த் தேவசே னாதிப
அஷ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஷ்டசித் திகனருள் ஈசன் புதல்வா
துட்டசம் காரா சுப்பிர மண்யா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
எண்கோ ணத்துள் இயங்கிய நாரணன்
கண்கொ ள்ளாக் காட்சி காட்டிய சடாட்சர
சைவம் வைணவம் சமரச மான
தெய்வமாய் விளங்கும் சரவணபவனே

சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலார்க்(கு) அருளும் ஈசா போற்றி
ஏதுசெய் திடினும் என்பால் இரங்கிக்
கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்
தரிசனம் கண்ட சாதுவோ(டு) உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்ரகம் அருள்வாய்
பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லைப் போக்கி நின் அன்பரோ(டு) என்னைச்
சல்லாப மாகச் சகலரும் போற்ற
கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்
அண்டர் நாயகனே அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் சண்டிபே தாளம்
சண்டமா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியோடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை சொக்கலும் சயமும்

மூல ரோகங்கள் முடக்குள் வலிப்பு
திட்டுமுறைகள் தெய்வச் சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டுக் காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடைய நாமம் ஓதியே நீறிடக்
கன்னலொன் றதனில் களைந்திடக் கருணை
செய்வதுன் கடனே செந்தில் நாயகனே
தெய்வ நாயகனே தீரனே சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

மார்பினும் தோளினும் மடியினும் வைத்துக்
கார்த்தி கேயாஎனக் கருணையால் கொஞ்சி
முன்னே கொட்டி முருகா வருகவென்(று)
அந்நேரம் வட்டமிட் டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்
கூவிய சேவற் கொடியாய் வருக
பாவலர்க் கருள்சிவ பாலனே வருக

அன்பர்க் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவனைப் புண்ணியா வருக
அழகிற் சிவனொளி அய்யனே வருக
களபம் அணியுமென் கந்தனே வருக
மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவோர் மலரணி மணியே வருக
திரிபுர பவனெனும் தேவே வருக
பரிபுர பவனெனும் பவனே வருக
சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர்கலீரென
சேலிற் சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலக்கிய பாதமும்
அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்
சிவகிரி மீதினில் திருநிறைக் கொலுவும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி
பொங்குமாந் தளிர்சேர் பொற்பீதாம் பரமும்

சந்திர காந்த சரிகைத் தொங்கலும்
மந்திர வாளும் வங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும்
ஒருகோடி சூரியன் உதித்த பிரபைபோல்
கணையால் அன்பரை காத்திடும் அழகும்
இருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பணாமுடி அணியுமா பரணமும்
வாயில்நன் மொழியாய் வழங்கிய சொல்லும்
நாபிக் கமலம் நவரோம பந்தியும்
மார்பில் சவ்வாது வாடை குபீரென
புழுகு பரிமளம் பொருந்திய புயமும்
ஒழுகிய சந்தனம் உயர்கத்தூரியும்
வலம்புரிச் சங்கொளி மணியணி மிடரும்
நலம் சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்
ஆணிவைடூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்

இடை விடாமல்உன் ஏவலர் போற்றச்
சிவனடி யார்கள் திருப்பாத மேந்த
நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளம் துலங்க
மங்கள மகாவைபவம் இலங்க
தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்
சேவர் கொடியும் சிறப்புடன் இலங்க
நந்திகே சவரன்மீது ஏளிய நயமும்

வந்தனம் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர
ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்
வீர மயிலேறி வெற்றிவேல் எடுத்துச்
சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சுரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூசனும்மாள
அடலற்ற குலத்தை அறுத்துச் சயித்து
விடதவே லாயுதம் வீசிக் கொக்கரித்துத்
தம்ப மெனும்சயத் தம்பம் நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்
திருப்பரங் குன்றம் சீர்ப்பதி செந்தூர்
திருவாவி னன்குடி திருவேரகமும்
துய்ய பழநி சுப்பிர மணியன்
மெய்யாய் விளங்கும் வீராலி மலை முதல்

அண்ணா மலையும் அருள்மேவும் கயிலை
கண்ணிய மாவூற்று கழுகுமா மலையும்
முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்
கதிர்காமம் செங்கோடு கதிர்வே ங்கடமும்
பதிநாலுலகத்திலும் பக்தர் மனத்திலும்
எங்கும் தானவ னாயிருந்(து) அடியார்தம்
பங்கி லிருந்து பாங்குடன் வாழ்க
கேட்ட வரமும் கிருபைப் படியே
தேட்ட முடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
தாட்டிக மாய் எனக்(கு) அருள்சண் முகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

உ

# கந்தர் சஷ்டி கவசம்

## பழமுதிர்ச் சோலைமலை கிழவோன்

### ஆறாவது கவசம்

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கர துணைவனே அமரர் தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழநிமா மலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்
சரவண பவனே சட்கோணத் துள்ளுறை

அரனருள் சுதனே ஐயனே சரணம்
சயிலொளி பவனேச டாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்
திரிபுர பவனே தேவசே னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்
திகழொளி பவனே சேவற் கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே
தருணவ வேளை தற்காத் தருளே
சவ்வும் ரவ்வுமாய்த் தானே யாகி
வவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
பவ்வும் வவ்வுமாய் பழமுதிர் சோலையில்
தவ்வியே ஆடும் சரவண பவனே
குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்
தஞ்சமென்றுன்னைச் சரணம் அடைந்தேன்

கொஞ்சிய உமையுடன் குழவியாய்ச் சென்றங்(கு)
அஞ்சலி செய்தவள் அமுதமும் உண்டு
கார்த்திகை மாதர் கனமார்(பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடை வீர வாகுவோ (டு) ஒன்பான்
தம்பிமா ராகத் தானையைக் கொண்ட
சம்பிர தாயா சண்முகா வேலா
நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்

பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன் அவ் வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மைநீ கேட்கத்
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை
அமரர்கள் எல்லாம் அதிசயப் படவே

மமதையாய் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்டு வேகம் தாக
உமையுடன் வந்தினி துவந்து பரிந்து
அயனைச் சிறைவிடென்(று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண்டி தனே
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலைமக ளுடனே
அறுவரோர் அம்சமாய் அரக்கரை வெல்ல
ஆறு முகத்துடன் அவதரித் தோனே
சிங்க முகாசுரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனோ டொத்த துட்டர்க ளோடு
கோரமே செய்யும் கொடிராயக் கதரை
வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்த அமரர்கள் தமக்குச்

சேனா பதியாய் தெய்வீக பட்டமும்
தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெருமானே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்
சிறப்புற பழநி திருவே ரகமுதல்
எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென்(று) ஓதினர் சமயம் அறிந்தங்(கு)
இன்பம் கொடுக்கும் ஏழைபங்காள
கும்பமா முனிக்குக் குருதே சிகனே
தேன்பொழில் பழநித் தேவ குமாரா
கண்பார்த்(து) எனையாள் கார்த்திகே யாஎன்
கஸ்டநிஸ் டூரம் கவலைகள் மாற்றி
அஸ்டலட்சுமிவாழ் அருளெனக்(கு) உதவி
இட்டமாய் என்முன் னிருந்து விளையாடத்

திட்டமாய் எனக்குருள் செய்வாய் குகனே
அருணகிரிதனக்(கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்குக் கடாட்சித் தருள்வாய்

தேவ ராயன் செப்பிய கவசம்
பூவல யத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஷ்டி கவசம் தான்செபிப் போரைச்
சிட்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென நாவில் மகிழ்வுடன் இருந்து
சங்கத் தமிழ்த்திறம் தந்தருள்வோனே
சரணம் சரணம் தமிழ்த் தரும் அரசே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்

**ஆறு கவசங்களும் முற்றுப்பெற்றன.**

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறையிலாது யிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.



மனிதன் மனித உயிரை பறிப்பது என்பது இன்று வெகு சாதாரண விடயமாகிவிட்டது. ஆயுத புழக்கம் ஒன்று நன்றாக இருப்பதால் ஆயுதங்களை உபயோகித்துப் பிரச்சனைகளின் தீர்வுகள் தேடப்பட்டு வருகின்றன. மனிதநேயம், நீதி பற்றி அலட்டுவது கிடையாது. மனிதன் மனித உயிரை மாய்ப்பது ஏனென்று நமக்குப் புரியாமல் போய்விட்டது. உயிர் பறிக்கப்பட்ட இம் மாமனிதன் ஆற்றியசேவை மக்கள் இதயங்களில் என்றும் ரீங்காரம் இட்டபடியே அழியாது நிலைத்து நிற்கும். அவரது அன்புக்குரியவர்களால் வெளிக்கொணரப்பட்டுள்ளது.



## நன்றி நவிலல்

எதிர்பாராத வேளையில் எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு அகாலமரணமடைந்த எமது அன்பிற்கும் பாசத்திற்கும் போற்றுதற்குமுரிய குலவிளக்கின் பிரிவினால் திக்கற்று இருந்த எமக்குப் பேருதவி புரிந்தும், நேரிலும் தொலைபேசியிலும், ஆறுதலளித்தும் மலரஞ்சலி செலுத்தியும் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டும் மற்றும் பல வழிகளிலும் பேருதவி புரிந்த உற்றவர் தொண்டர் ஸ்தாபனங்கள், கச்சேரி அலுவலர்கள், சிதம்பர நலன்புரி நிலைய மக்கள், நண்பர்கட்கும் ஆறாம் மாதக் கண்ணீர் நினைவமுத இதழிற்கு நினைவுக் கட்டுரைகள் கவிதைகள் தந்துதவிய நல் உள்ளங்களுக்கும் மற்றும் பலவழிகளில் அர்ப்பணிப்புகள் செய்தோருக்கும், அன்னவரின் ஆத்மசாந்திக்காய் வேண்டி அந்தியேட்டி, வீட்டுக் கிரியைகளில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

இங்ஙனம்
மனைவி, பெற்றோர், சகோதரி, பேரன்,
மாமன் குடும்பத்தினர், உறவினர்கள்,
நண்பர்கள்.

12/1, இராசதுரை வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.

90, சட்டநாதர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

திரு. இ. இரத்தினசபாபதி
75, Silver Spring Blud,
Apt. 610, Scarborough, Ontario - M1V1W2,
Canada. (416) 291 3054

# வம்சாவழி

## வயிரமுத்து ஆறுமுகம் அம்மணிப்பிள்ளை

- இராசையா (இராசையா + சன்ஸ் மருந்துக்கடை உரிமையாளர்) லண்டன் + தங்கம்மா
  - இரத்தினசபாபதி + சத்தியபாபா
    - இளங்கோவன்
    - இளஞ்சேயன்
    - அனுசூயா
    - [redacted]
  - **இரத்தினபூபதி** + **தியாகராஜா**
    - **ஸ்ரீதரன்**
    - **ரஜிதா**
    - சிறிவதனி
  - இராசரத்தினம் + சோதிமலர்
    - **ரஜிதா**
    - விஜிதா
    - ரஜனி
    - ராஜசெழியன்
    - ராஜசேரன்
  - இந்திராதேவி + இராசரத்தினம்
  - இராமநாதன் + வசந்தி
    - குமரன்
    - ரதிலஸ்மி
- செல்லம்மா + பொன்னுத்துரை
  - இராசலட்சுமி + பரமானந்தம்
    - சந்தானலட்சுமி
    - கமலாதேவி
    - ஜெகநாதன்
    - சந்திரா
  - **தியாகராஜா**
  - பரமேஸ்வரி + நடராசா
    - கேதீஸ்வரன்
    - மனோரஞ்சினி
    - சுந்தரமூர்த்தி
    - யோகேந்திரன்
  - சரஸ்வதி + காசிப்பிள்ளை
    - இராசரத்தினம்
    - வசந்தா
    - அரசரத்தினம்
    - வினிதா
    - குணரத்தினம்
    - சிவரத்தினம்
    - தவரத்தினம்
- சிவபாக்கியம் + அருணாசலம்
  - கோபாலரத்தினம் + புவனேஸ்வரி
    - சசிகலா
    - காண்டீபன்
    - மேகலா
    - தனஞ்ஜெயன்
  - இராசரத்தினம் + இந்திராதேவி
    - மகிந்தன்
    - முகுந்தன்